Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 67

ஞாயிற்றுக்கிழமை
01 பெப்ரவரி 2026

தை 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16+08
விலை – ரூபா 60



# இராணுவ முகாம்களை அகற்ற விரும்பவில்லையாம் தமிழர்கள்!

முன்னாள் அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

**கொழும்பு, பெப்ரவரி 1**

**வடக்கு மாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்களை முழுமையாக அகற்றுவதற்கு தமிழர்களுக்கு விருப்பமில்லை. அவை இருப்பதே தமக்குப் பாதுகாப்பு என அவர்கள் கருதுகின்றனர் - இவ்வாறு முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.** »15

## என்று தணியும் சுதந்திர தாகம்

பெப்ரவரி 4ஆம் திகதி கருத்தரங்குக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 1
'என்று தணியும் சுதந்திர தாகம்' என்ற தலைப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து விசேட கருத்தரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளன. யாழ்ப்பாணம் »15

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் போராட்டம் ஆரம்பம்

இன்றும் தொடரும்

யாழ்ப்பாணம், பெப். 1
தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளை உரிமையாளர்களிடம் கையளிக்குமாறு வலியுறுத்தியும் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது. இந்தப் போராட்டம் »15



## மாவை. சேனாதிராஜாவுக்கு உருவச்சிலை திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 1
மாவை.சேனாதிராஜாவின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் அவருக்கு உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டதுடன், அஞ்சலி நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டது. மாவிட்டபுரத்தில் உள்ள மாவை.சேனாதிராஜாவின் இல்லத்தில் இந்தச் சிலை திறந்து வைக்கப்பட்டது. வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், தமிழகத்தின் முன்னாள் அமைச்சர் ந.நல்லுசாமி. »15

## வாக்காளர் இடாப்பு மீளாய்வு ஆரம்பம்!

கொழும்பு, பெப். 1
வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகளை இலங்கைத் தேர்தல்கள் திணைக்களம் நேற்று ஆரம்பித்துள்ளது. நாடு முழுவதும் இந்தப் பணிகள் இடம்பெறவுள்ளன. தகுதியுள்ள அனைத்து மக்களின் »15

## பிரஜாசக்தி வேண்டாம் வலி. கிழக்கு தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 1
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள பிரஜா சக்தி திட்டம் கைவிடப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, வலிகாமம் கிழக்கு பிரதேசசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. »15

## இலங்கையைச் சேர்ந்த 71 குற்றவாளிகளுக்கு உலகளாவிய பிடியாணை

கொழும்பு, பெப். 1
இலங்கையைச் சேர்ந்த 71 குற்றவாளிகளுக்கு உலகளாவிய பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வுட்லர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் பாரதூரமான »15

## அத்தியாவசியமாக பல்வேறு சேவைகள்

கொழும்பு, பெப். 1
பொதுமக்களின் நாளாந்த தேவைகளுடன் தொடர்புடைய பல முக்கியமான சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதியால் அதிவிசேட வர்த்த »15

## முல்லைக் கடலில் நேற்று நிலநடுக்கம்

வவுனியா வரை உணரப்பட்ட அதிர்வு

திருகோமலை, பெப். 1
முல்லைத்தீவுக்கும் திருகோணமலைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில், நேற்று மாலை 3.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.
இந்த நிலநடுக்கம் தொடர்பில் திருகோணமலை இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்ததாவது:-
முல்லைத்தீவுக் கடற்பரப்புக்கு மிக அண்மித்ததாக, முல்லைத்தீவுக்கும் திருகோணமலைக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 3.6 ரிக்டர் அளவில் »15

## நாமல், ஷிராந்திக்கு எதிராக நாளைமறுதினம் விசாரணை



கொழும்பு, பெப். 1
மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக, மஹிந்தவின் »15

"ஆமிக்காரர் இருக்கிறது எங்களுக்கு விருப்பம் எண்டு எங்களுக்கே வடை சுடுகிறதுக்கும் ஒரு துணிவு வேணும் கண்டியளோ"

## கணக்காய்வாளர் நாயகம் செவ்வாயன்று தீர்மானம்!

கொழும்பு, பெப். 1
புதிய கணக்காய்வாளர் நாயகம் தொடர்பில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை தீர்மானம் எடுக்கப்படும் என்று, அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- »15

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4333 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 23 35 49 57 |
| விசேட எழுத்து | B |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1400 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 11 34 39 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0359 |
| ஆங்கில எழுத்து | |
| வெற்றி இலக்கங்கள் | |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2439 |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 23 43 46 62 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6091 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 7 5 4 7 5 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2121 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 01 19 54 58 |
| விசேட எழுத்து | M |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0207 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 28 32 44 |

# சிறுவர்கள் மீது சமூக ஊடகத் தாக்கம் மதிப்பீட்டுத்திட்டம் அரசால் ஆரம்பம்!

**கொழும்பு, பெப்.1**
**இலங்கையில் பிள்ளைகள் மீதான சமூக ஊடகங்களின் தாக்கம் குறித்த தேசிய மதிப்பீடு மற்றும் கொள்கை மீளாய்வு ஒன்றை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இதுதொடர்பில் டிஜிற்றல் பொருளாதாரப் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவிக்கையில்,
கல்வி அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மற்றும் டிஜிற்றல் பொருளாதார அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுகளும் இணைந்து இந்த மதிப்பீட்டுத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.
இதற்காக கல்வி, சுகாதாரம், உள ஆரோக்கியம், சைபர் பாதுகாப்பு மற்றும் சட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைசார் நிபுணர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் இளைஞர்களின் கருத்துகள் உள்வாங்கப்படவுள்ளன.
இணையப் பயன்பாட்டைத் தடுக்கும்போது பிள்ளைகள் கோபம், பிடிவாதம் மற்றும் கூச்சலிடுதல் போன்ற குணாதிசயங்களை வெளிப்படுத்துகின்றனர்.
சில சந்தர்ப்பங்களில் இந்தத் தூண்டல்கள் உயிர்மாய்ப்பு மனநிலைவரை பிள்ளைகளைக் கொண்டுசெல்கின்றன.
வெறும் கோஷங்களின் பின்னால் செல்லாமல், தரவுகள் மற்றும் ஆராய்ச்சிகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
சர்வதேச அனுபவங்களை ஆராய்ந்து, இலங்கைக்குப் பொருத்தமான வகையில் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு தேசியத் திட்டத்தைத் தயாரிப்பதே இந்தக் கொள்கை மீளாய்வின் இறுதி இலக்காகும்- என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | 31.01.2026 | |
| தினம் | சனிக்கிழமை | |
| வெற்றி வாரம் | 0799 | |
| ஆங்கில எழுத்து | O | |
| வெற்றி இலக்கம் | 4 5 7 1 8 2 | |

| Super Ball | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| தினம் | சனிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3065 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 28 31 62 70 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 09 21 31 42 |
| வெற்றி வாரம் | 5226 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0895 |
| வெற்றி இலக்கம் | 13 38 47 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| தினம் | சனிக்கிழமை |
| | சிம்மம் |
| வெற்றி இலக்கம் | 11 13 14 61 |
| சீட்டிழுப்பு வாரம் | 4777 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கம் | 13 20 26 63 |
| வெற்றி வாரம் | 2241 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 31.01.2026 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கம் | 06 46 70 71 |
| வெற்றி வாரம் | 2891 |

## மக்களின் ஆணை யாருக்கு? தேர்தலை நடத்தி நிரூபிக்குக

### பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, பெப்.1
மக்கள் ஆணை தற்போது யாருக்குள்ளது? என்பதை அறிவதற்காக அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்று ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி வலியுறுத்தியுள்ளது.
இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட அந்தக் கட்சி உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சானக வக்கும்புர தெரிவிக்கையில்,
சர்வதேச நாணயநிதியத்தின் வழிகாட்டலுக்கமையவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்படுகின்றது.
எரிபொருள் விலை மற்றும் மின்சாரக் கட்டணம் என்பன குறைக்கப்படும் என ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் உறுதியளிக்கப்பட்டது. அவை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.
இதனால் மக்கள் அதிருப்தியில் உள்ளனர். மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம்.
அவ்வாறு தேர்தலை நடத்தினால் அரசாங்கம் மீதான மக்கள் எதிர்ப்பு தெரியவரும். ஆனால் அதனை அரசாங்கம் செய்வதற்குத் தயாரில்லை- என்றார். (ச-44)

## சாகும்வரை போராட்டம்; கொழும்பில் தொடர்கிறது

கொழும்பு,பெப்.1
தற்காலிக ஆசிரியர் நியமனங்களை நிரந்தரமாக்குமாறு வலியுறுத்தி ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஐந்தாவது நாளாக ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.
கடந்த 7 வருடங்களாகப் பாடசாலைகளில் கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள தமக்கு, ஆசிரியர் சேவையில் முறையான அந்தஸ்து வழங்கப்படவேண்டுமெனக் கோரி ஜனவரி 26ஆம் திகதி முதல் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
எதிர்க்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் சிவில் அமைப்புகளும் போராட்டக்களத்துக்கு வந்து எமக்கு ஆதரவாக நின்றபோதிலும், அரச தரப்பினர் பொருட்படுத்தவில்லை. இதுவரை எவ்வித சாதகமான பதிலையும் வழங்கவில்லை என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-இ)



## திருமலையில் அடைமழை

திருகோணமலை, பெப்.1
திருகோணமலையில் அடைமழை பெய்துவருகின்றது.
இதனால் தற்போது இடம்பெறும் நெல் அறுவடை தடைப்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்புநிலையும் பாதிப்படைந்துள்ளது.
கிண்ணியா, தம்பலகாமம், கந்தளாய் உள்ளிட்ட பல இடங்களிலும் மழை பெய்து வருகின்றது.
தாழ்நிலப்பகுதிகள் பல நீரில் மூழ்கியுள்ளன. (ச-இ)

## சிறுதானியச் செய்கைக்கு மானிய விலையில் விதைகள்


யாழ்ப்பாணம்,பெப்.1
சிறுதானியச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக விவசாயிகளுக்கு மானியவிலையில் உளுந்து, பயறு, கௌபி என்பன வழங்கப்பட்டு வருகின்றன என்று யாழ்.மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறிரங்கன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
பெரும்போக நெல் அறுவடையை மேற்கொண்ட விவசாயிகள் காலநிலை மாற்றங்களைக் கருத்திற்கொண்டு தற்போது சிறுதானியச் செய்கையை முன்னெடுக்கமுடியும். ஆர்வமுள்ள விவசாயிகள் தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்புகொள்ளலாம்- என்றார். (க-17)

## பிரச்சினைகளை திசைதிருப்ப இனவாதம் பரப்பும் ஜனாதிபதி

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.1
நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இனவாதத்தைப் பரப்ப முயற்சிக்கின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
தலதாமாளிகை மீது குண்டுத்தாக்குதல் நடத்தியவர்கள், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை எதிர்த்து அப்பாவி மக்களைக் கொன்றவரின் ஆட்சியில் இவற்றையே எதிர்பார்க்கமுடியும், சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்க்கமுடியாது. தகுதியானவர்கள் இதற்கு முன்னர் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டனர். ஆனால் தற்போது ஜனாதிபதியின் நண்பர்களை இந்தப் பதவிக்கு நியமிக்கவேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகவுள்ளது. அதனாலேயே ஜனாதிபதியின் பரிந்துரைகள் தொடர்ச்சியாக நிராகரிக்கப்படுகின்றன.
நிலக்கரி விலைமுறி, கொள்கலன் விடுவிப்பு உள்ளிட்ட ஊழல், மோசடிகளை மறைப்பதற்காகவே அரசாங்கம் தனக்குத் தேவையான ஒருவரைக் கணக்காய்வாளராக நியமிக்க முயற்சிக்கிறது. அரசாங்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் பிரச்சினைக்குரியவையாகவே காணப்படுகின்றன. தம்மால் உருவாக்கப்பட்டுள்ள பிரச்சினைகளை மறைப்பதற்காக இனவாதத்தைத் தூண்டுவதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார் -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த் தேசிய அரசியலை ஒழிப்பதற்கு நுணுக்கமான ஊடுருவல் 'பிரஜாசக்தி'!

## அரசியல் ஆய்வாளர் சி. அ.யோதிலிங்கம் எச்சரிக்கை

வவுனியா, பெப்.1

**தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் 'பிரஜா சக்தி' திட்டம், தமிழ்த் தேசிய அரசியலை அடிமட்டத்திலிருந்து சிதைக்கக்கூடிய ஒரு மிகப்பெரிய ஆபத்து என அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியுமான சி. அ. யோதிலிங்கம் தெரிவித்துள்ளார். வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப் பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்ப் பகுதிகளில் உள்ள உள்ளூ ராட்சி மன்றங்களின் அதிகாரங் களை நீர்த்துப்போகச் செய்வதற் காக, அதற்குச் சமாந்தரமாக உருவாக்கப்பட்ட ஒரு கட்டமைப்பே இந்த 'பிரஜாசக்தி'. கிராமங்களில் மக்கள் விரும்பும் தலைவர்களைத் தெரிவுசெய்யாமல், தேசிய மக்கள் சக்திக்கு விசுவாசமாக இருப்பவர் களே இந்தத் திட்டத்தின் தலைவர் களாக நியமிக்கப்படுகின்றனர்.

ஜனாதிபதியின் வருகையின் போதுமக்களைத்திரட்டுவதற்காகக் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் பிரஜாசக்தி அமைப்புகளுக்குக் கட்டளையிடப் படுவதாகச் செய்திகள் வருகின் றன.

இது ஜே.வி.பி. பாணியிலான அடி மட்ட அரசியல் ஊடுருவலாகும். தமிழ் அரசியற்கட்சிகள் வெறும் 'எதிர்ப்பு அரசியலில்' மட்டுமே கவ னம் செலுத்துகின்றன. தமிழ்த் தேசிய அரசியலைத் தக்கவைக்க வேண்டுமானால், தமிழ் அரசியல் சக்திகள் வெறும் கோஷங்களுடன் நின்றுவிடாமல், மக்களின் அடிப் படைத் தேவைகள் மற்றும் வாழ் வாதாரப் பிரச்சினைகளில் நேரடி யாகக் கவனம் செலுத்தவேண் டும்.

இல்லையெனில், இந்தப் 'பிரஜா சக்தி' கட்டமைப்பு தமிழ்த் தேசியத் தின் வேர்களை மெல்ல மெல்ல அழித்துவிடும்- என்றார். (ச-27)

# 'பிரஜாசக்தி' நியமனங்கள் அரசாங்கத்தால் குளறுபடி

## ஒருங்கிணைப்புக்குழுவில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.1

சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் ஏற்கெனவே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 'பிரஜாசக்தி' அமைப்பு உறுப்பினர் களை நீக்கிவிட்டு, தேசிய மக்கள் சக்தியினர் புதியவர்களை நியமித்துள்ளனர் என வலிகாமம் மேற்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சல சலப்பு ஏற்பட்டது.

சங்கானைப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவிக்கையில்,

காட்டுப்புலம் பகுதியில் பிரஜாசக்தி அமைப்பிற்காக மூன்று பிரதிநிதிகள் ஏற்கெனவே மக்களால் முறை யாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். ஆனால், அவர் களைத் தன்னிச்சையாக நீக்கிவிட்டு, புதிதாக மூவரைத் தேசிய மக்கள் சக்தியினர் நியமித்துள்ளனர். இவ்வா றான மாற்றங்களைச் செய்யுமாறு நீங்களே (நாடாளு மன்ற உறுப்பினர் ஸ்ரீபவானந்தராஜா) கூறியதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மக்களின் பிரச்சினைகளோ அல்லது கிராமத்தின் அடிப் படை நிலைவரங்களோ தெரியாத புதியவர்களை இவ் வாறு நியமித்தால், அவர்கள் எப்படி மக்களின் குறை களை உங்களிடம் கொண்டுவருவார்கள்? எமது பிரச்சி னைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதி அளித்த நீங்கள், இப்போது இவ்வாறு செயற்படுவது ஏன்?- என்றார்.

இதன்போது அவரைத் தடுத்து பதிலளித்த நாடாளு மன்ற உறுப்பினர் ஸ்ரீபவானந்தராஜா, இதுகுறித்து எழுத்துமூலமாகத் தாருங்கள், நாம் அதனைப் பரிசீலிக் கின்றோம். இந்த நடைமுறை ஜனாதிபதியால் கொண்டு வரப்பட்ட ஒன்றாகும். இதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அதனை ஒரு கடிதம் மூலம் எமக்குத் தெரி யப்படுத்துங்கள்- என்றார். (ச-27)

# யாழ். நகரில் நேற்று மழை

யாழ்ப்பாணம் நகரப் பகுதி உட்பட பல்வேறு பகுதிகளில் நேற்று மாலை தொடக்கம், நள் ளிரவு வரை மிதமானது முதல் கனமானது வரை யான மழைப்பொழிவு பதிவானது. (ம)



# வவுனியா - கொழும்பு இடையே இ.போ.ச. வின் சொகுசுச்சேவை

வவுனியாவில் இருந்து கொழும்புக்கான புதிய சொகுசு பேருந்துச் சேவை ஒன்று இலங்கை போக்குவரத்துச்சபையின் வவுனியா சாலையால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த பேருந்துச் சேவை வவுனியா புதிய பேருந்துநிலையத்தில் இருந்து தினமும் காலை 9.05மணிக்கு புறப்பட்டு புத்தளம் வழியாகக் கொழும்பைச் சென்றடையும். வவுனியா சாலைக்குச் சொந்த மாக சொகுசுப் பேருந்துகள் இல்லாத நிலையில் அநுராதபுரம் சாலைக்குச் சொந் தமான பேருந்தின் மூலம் இந்தச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த சேவை முதற்கட்டமாக ஒருவழிப்பாதை கொண்டதாக அமைந்துள்ளதுடன் வரும் காலங்களில் இருமார்க்கமாக விஸ்தரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-10)


# நன்றி நவிலலும், அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 05.01.2026 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத்தலைவி

**அமரர் விஸ்வலிங்கம் சிவஞானவதியார்**

அன்னாரது பிரிவால் துயருற்றிருந்த போது எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எங்களுடைய உளமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு, அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர் வரும் 03.02.2026 செவ்வாய்க்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. மறுநாள் 04.02.2026 நண்பகல் 11.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் கொக்குவில் மேற்கு அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**செ.ந.விஸ்வலிங்கம் - 021 222 3153**
**வி.திருக்குமரன் - 077 967 9597**
**வி.மணிவண்ணன் - 077 959 9361**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.02.2026 ஞாயிற்றுக்கிழமை





காரைநகரில்

# புதிய சூரிய உலர்த்தி திறப்பு நஞ்சற்ற உற்பத்திக்கு வலு!

**யாழ்ப்பாணம், பெப்.1**
**காரைநகரில் அமைந்துள்ள உள்ளூர் உற்பத்தி நிறுவனமான பல்லுயிர் நிறுவனத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சூரிய உலர்த்தி கடந்த வியாழக்கிழமை திறக்கப்பட்டுள்ளது.**

இந்த நிறுவனமானது செயற்கை இரசாயனமற்ற இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் விவசாயிகளின் தானியங்களைக் கொள்வனவு செய்து, அதிலிருந்து பல்வேறு விதமான உற்பத்திப் பொருள்களைத் தயாரித்து உள்ளூர்ச் சந்தையில் விற்பனை செய்வது மாத்திரமன்றி, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்துவருகின்றது. நஞ்சற்ற உற்பத்திகளை மக்களுக்கு வழங்கும் நோக்கில், யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி வெளிமாவட்டங்களில் இருந்தும் இயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களைக் கொள்வனவு செய்து உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக செயலர் கைலாயபிள்ளை சிவகரன், தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் றோஹித்த பிரசாந்த, நிறுவனத்தின் பணிப்பாளர் எந்திரி ரத்நாயக்க, காரைநகர் பிரதேச செயலர் ரஞ்சனா, மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி மௌலீஸ்வரன் பல்லுயிர் நிறுவனத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-27)

## மாந்தை கிழக்கு 50 வீட்டுத்திட்டம்; மீள அமைப்பதற்கு நடவடிக்கை!

முல்லைத்தீவு,பெப்.1
மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 50 வீட்டுத்திட்டப் பகுதியில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வீடுகளை, முன்னுரிமை அடிப்படையில் மீள அமைத்துக் கொடுக்க விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ. உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குறித்த வீடுகள் மிக மோசமாகச் சேதமடைந்திருப்பதால், குடியிருப்பாளர்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

குறித்த மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், இந்த வீடுகளைப் புனரமைத்து வழங்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. (க-246)

# 1000 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வடக்கு மாகாணத்தில் வாழ்வாதார உதவிகள்!

கிளிநொச்சி, பெப்.1
வடக்கு மாகாணத்தில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட ஆயிரம், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கும் செயற்றிட்டத்தில், முதற்கட்டமாக, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 181 குடும்பங்களுக்கு உதவிகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

சிங்கப்பூரைச் சேர்ந்த ரி.ரி.துரை குடும்பத்தினர் மற்றும் சரசீஜா ராமன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெயசேகரத்தின் ஏற்பாட்டில், உதவிகள் வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்துக்கு ஒரு கோடி 46 இலட்சத்து 24 ஆயிரத்து 400 ரூபா செலவிடப்பட்டுள்ளது. அடுத்தகட்ட உதவிகள் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளன. (க-113)



## திருமலை காணி மத்தியஸ்த குழாமுக்கு நியமனக்கடிதம்

திருகோணமலை, பெப்.1
திருகோணமலை மாவட்ட விசேட காணி மத்தியஸ்த குழாத்திற்கான புதிய தவிசாளர்,உபதவிசாளர் மற்றும் மத்தியஸ்தர்களுக்கு கடந்த புதன்கிழமை நியமனக்கடிதங்கள் வழங்கிவைக்கப்பட்டன. திருகோணமலை மாவட்டச் செயலர் டபிள்யூ.எம்.ஹேமந்த குமார நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பங்குபற்றி மத்தியஸ்தர்களுக்கான நியமனக்கடிதங்களை வழங்கிவைத்தார். (ச-50)



### கூட்டுறவுப் பணியாளர்கள் நல்லூரில் பணிப்புறக்கணிப்பு

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் நேற்றுமுன்தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். சங்கத்துக்குப் புதிதாக பொதுமுகாமையாளரை நியமிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தைத் தவிர, கிளை விற்பனை நிலையங்கள் மற்றும் சங்க அலுவலகம் ஆகியவற்றை முழுமையாகப் பூட்டி, புதிதாக நியமிக்கப்படும் பொதுமுகாமையாளருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. (க-17)

## மகாத்மா காந்தியின் சிரார்த்தினம் யாழில்

யாழ்ப்பாணம், பெப்.1
இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தியின் 78ஆவது சிரார்த்த தினம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.



யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு யாழ். போதனா மருத்துவமனையின் முன்னால் அமைந்துள்ள காந்தியின் திருவுருவச் சிலையடியில் இடம்பெற்றது. இதன்போது யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி மலர்மாலை அணிவித்து நினைவு கூர்ந்தார். வாழ்நாள் பேராசிரியர் மோகன தாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் ச.லலீசன் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-21)

தோட்ட வேலையாட்கள் 20 பேர் உடனடியாக தேவை


யாழ்ப்பாணத்தில் இயங்கும் உழவர் பண்ணையில் வேலை செய்வதற்கு (45 வயதிற்கு உட்பட்ட ஆண்,பெண்) தோட்ட வேலைகளில் அனுபவம் உள்ள வேலையாட்க்கள் தேவை.

Contact - 076287815

(CS 31127) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடியும் நிலையில் வகுப்பறைகள் உயிர் அச்சத்தில் மாணவர்கள்!



## தண்ணீரூற்று பாடசாலையில் அவலம்

**முல்லைத்தீவு, பெப்.1**

**அடிப்படை வசதிகளின்றி மிக மோசமான நிலையில் முல்லைத்தீவு தண்ணீரூற்று இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை இயங்கி வருவதாக பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.**

இந்தப் பாடசாலையின் கட்டடங்கள் மிகப் பழைமையானவை என்பதுடன் பெரும் வெடிப்புகளுடன் இடிந்துவிழும் நிலையில் காணப்படுகின்றன.

மழைக்காலங்களில் இந்த வெடிப்புகள் ஊடாக நீர் கசிந்து வகுப்பறைகளுக்குள் தேங்குகின்றது. பாடசாலை மைதானம் மற்றும் சுற்றுப்புறம் முழுவதும் நீர் தேங்கி சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

மாணவர்கள் வகுப்பறைகளுக்கும் கழிப்பறைகளுக்கும் செல்ல முடியாத நிலை உள்ளது. இதனால் நோய்த்தொற்று ஏற்படும் அபாயமும் நிலவுகிறது.

இத்தகைய பாதுகாப்பற்ற சூழல் காரணமாகத் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பப் பெற்றோர் அஞ்சுவதாகவும், இதனால் மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டு இந்தப் பாடசாலையின் கட்டமைப்பு வசதிகளைச் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். (ச-246)

# சட்டவிரோத சொத்துக் குவிப்பு பொலிஸாரும் உடந்தையா?

## கண்காணிப்பு தீவிரம்

யாழ்ப்பாணம், பெப்.1

சட்டவிரோதச் செயல்கள் மூலம் குறுகிய காலத்தில் சொத்துச் சேர்த்த 'திடீர் பணக்காரர்கள்' மற்றும் அவர்களுக்குத் தகவல் வழங்கும் பொலிஸார் குறித்துத் தீவிர கண்காணிப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார். சங்கானையில் நடைபெற்ற வலிகாமம் மேற்குப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சங்கானைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பணத்தைச் சேகரித்து பணக்காரர்களாக மாறியவர்கள் பற்றிய துல்லியமான தகவல்கள் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளன. இந்தத் தகவல்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக உரிய உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

குற்றவாளிகளுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வரும் பொலிஸார் குறித்தும் அவதானித்து வருகின்றோம். இவ்வாறான நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் பாயும் என்றும் எச்சரித்தார். (ச-27)

# மருத்துவர்கள், தாதியர்களின்றி வட்டுக்கோட்டை மருத்துவமனை!

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப்.1

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் போதிய கட்டில் வசதிகள் இருந்தும் அவற்றைப் பயன்படுத்தி மக்களுக்குச் சிகிச்சை அளிக்கத் தேவையான மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் இல்லாத காரணத்தால் மருத்துவ சேவை முடங்கியுள்ளதாக கலாநிதி சிதம்பரமோகன் சுட்டிக்காட்டியுள்ளார். வலிகாமம் மேற்குப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சங்கானைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


புனர்வாழ்வு அமைச்சிடமிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு 80 கட்டில்களையும், வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனைக்கு 20 கட்டில்களையும் நாம் பெற்றுக்கொடுத்தோம். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நோயாளிகள் கட்டில்கள் இல்லாமல் அவதியுறுகின்றனர். ஆனால், வட்டுக்கோட்டை மருத்துவமனையிலோ கட்டில்கள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. இரவு வேளைகளில் அவசர சிகிச்சைகளுக்காக ஒரு மருத்துவரையும் தாதியரையும் நியமிக்குமாறு பலமுறை கோரியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை - என்றார். (ச-27)

# முத்துக்குமார் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், பெப்.1

தமிழீழ மண்ணின் விடுதலைக்காகவும், தமிழ் இனத்தின் உரிமைக்காகவும் தன் உடலையே தீயில் உவந்தளித்த முத்துக்குமாரின் நினைவுநாள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

யாழில் உள்ள தமிழீழத் தாயக நினைவேந்தல் பணிமனையில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது. (ச-27)



# தெல்லிப்பழையில் நல்லிணக்கப் பொங்கல்

யாழ்ப்பாணம், பெப்.1

இலங்கையின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளுக்கிடையிலான கலாசார உறவை மேம்படுத்தும் நோக்கில் தனித்துவமான கலாசார அனுபவப் பகிர்வு மற்றும் பொங்கல் விழா தெல்லிப்பழை யாழ். யூனியன் கல்லூரியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கல்லூரி அதிபர் தி. வரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவனேசன், கெக்கிராவா திறப்பனே கல்விப் பிரிவின் அனைத்து அதிபர்கள், கல்வி அதிகாரிகள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். இரு பகுதி மாணவர்களின் திறமைகளையும், கலாசார விழுமியங்களையும் பறைசாற்றும் வகையில் பல்வேறு கலைநிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. (ச-66,159)

# போத்தல் 'கள்' விற்பனையால் உள்ளூர் உற்பத்தி பாதிப்பு!

## மன்னார் தொழிலாளர்கள் கவலை

மன்னார், பெப்.1

மன்னார் நகரசபை எல்லைக்குட்பட்ட மதுபானசாலைகளில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனை செய்யப்படுவதால், பாரம்பரிய சீவல் தொழிலில் ஈடுபடுவோர் வாழ்வாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் என்று சீவல் தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மன்னார் நகரசபை முதல்வருக்கு அந்தச் சங்கம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

மன்னார், பள்ளிமுனை, டிப்போ மற்றும் கீரி ஆகிய நான்கு பகுதிகளில் சீவல் தொழிலாளர் சங்கத்துக்குச் சொந்தமான கள்ளுத் தவறணைகள் இயங்கிவருகின்றன. பனங்கள் உற்பத்திக்கான பருவக்காலம் ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரையாகும். தற்பொழுது 2026ஆம் ஆண்டுக்கான உற்பத்திப் பருவத்தில் தொழிலாளர்கள் ஆர்வம் காட்டிவருகின்றனர். இந்தநிலையில் மன்னார் நகர எல்லைக்குள் உள்ள இரண்டு தனியார் மதுபானசாலைகளில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனை செய்யப்படுகிறது. இதனால், உள்ளூர் சீவல் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் சுத்தமான பனங்கள்ளு விற்பனையாகாமல் தேக்கமடைந்துள்ளது. தமது குடும்பங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, மன்னார் நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட மதுபானசாலைகளில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் விற்பனை செய்யப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்– என்றுள்ளது. (ச-60)

# நிதியொதுக்கீடு கிடைத்ததும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்


## ஸ்ரீபவானந்தராஜா உறுதி

யாழ்ப்பாணம், பெப்.1

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் நிலவும் மருத்துவர் மற்றும் தாதியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், நிதி ஒதுக்கீடுகள் கிடைத்தவுடன் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்றும் வலிகாமம் மேற்குப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் ஸ்ரீபவானந்தாராஜா தெரிவித்தார்.

சங்கானைப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில், வட்டுக்கோட்டை மருத்துவமனையின் ஆளணிப் பற்றாக்குறை குறித்து எழுப்பப்பட்ட வினாக்களுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்ச ஈஸ்வரங்களுக்கு தரிசன யாத்திரை

யாழ்ப்பாணம், பெப்.1

மகா சிவராத்திரியை முன்னிட்டு, இலங்கை முதலுதவிச் சங்கத்தின் இந்து சமயத் தொண்டர் சபையினால் இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க பஞ்ச ஈஸ்வரங்களுக்கான விசேட தரிசன யாத்திரை எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. யாத்திரையன்று காலை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் சிவ நடனம், பூஜை மற்றும் பஜனை வழிபாடுகளுடன் குருமார்களின் ஆசியுடன் ஆரம்பமாகும். நகுலேஸ்வரத்திலிருந்து ஆரம்பமாகும் யாத்திரை, பிரதான வீதியூடாக திருகோணமலை திருக்கோணேஸ்வரம், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் மற்றும் மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆகிய ஆலயங்களைச் சென்றடையும். திருக்கேதீஸ்வரத்தில் இரவு தங்கி, அதிகாலை பாலாவி தீர்த்தக் கேணியில் நீராடி, அடியார்கள் தங்கள் கரங்களினால் சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து வழிபடுவர்.

தரிசன யாத்திரையில் இணைந்துகொள்ள விரும்பும் அடியவர்கள், எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் தங்களது பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விவரங்களை 0779236552 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பி வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)



# நல்லூர் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை

யாழ்ப்பாணம்,பெப்.1

நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் நெற்புதிர் அறுவடை நிகழ்வு நேற்றுக்காலை இடம்பெற்றது.

தைப்பூசத் தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் 'புதிர் தினம்' எனும் இந்தப் பாரம்பரிய நிகழ்வில் தேவஸ்தான அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய தேவஸ்தானத்துக்குச் சொந்தமான மறவன்புலவில் உள்ள வயலுக்குச் செல்வார்கள்.

அந்த வயலில் பூஜை வழிபாட்டுடன் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து நல்லூர்க் கந்தசுவாமிக்கு படையல் வைத்து பூசைகள் செய்வது வழக்கம்.

இந்த வழிபாட்டு முறை நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் மரபாக பண்பாட்டு விழாவாகப் பேணப்பட்டு வருகிறது. (ச)



படம்- ஐ. சிவசாந்தன்

# நல்லூர் நாயன்மார் வீதி புனரமைப்புப்பணி ஆரம்பம்

## ரூ.17.91 மில்லியன் நிதியொதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப்.1

'மறுமலர்ச்சிக்கான பாதை' எனும் கிராமியப் பாதைகளுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நல்லூர்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நாயன்மார் பகுதி வீதி புனரமைப்புப் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த வீதிப் புனரமைப்புப் பணிகளுக்காக 17.91மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 1.2 கிலோமீற்றர் நீளமான வீதிப்பகுதியே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளது.

இவ்வீதிப் புனரமைப்புப் பணிகளுக்கான ஆரம்ப நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-26,17)




# யாழ்ப்பாணம், முல்லைத்தீவு நகரங்கள் அபிவிருத்தி!

கிளிநொச்சி, பெப்.1

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் புதிய நகர அபிவிருத்தித்திட்டத்தின்கீழ், முதற்கட்டமாக நாடு முழுவதும் 20 நகரங்கள் அபிவிருத்திக்கு உள்வாங்கப்படவுள்ள நிலையில் அதன் ஒரு பகுதியாக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள நகரங்களும் உள்ளீர்க்கப்படவுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டத்தின்கீழ் வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் நெல்லியடி, மானிப்பாய் நகரங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகர் என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

நவீன நகரமயமாக்கலுக்கு ஏற்ப வீதிகள், பொது வசதிகள் மற்றும் வர்த்தக மையங்கள் புனரமைக்கப்படும். படிப்படியாக நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நகர அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை உறுதி செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-66)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**இடபம்:** தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாகமுடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்து கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். நீண்டநாளாக எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாகமுடியும். நண்பர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். முக்கியமான பிரமுகர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று கிடைக்க வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**விருச்சிகம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சிறு தடை ஏற்படக்கூடும். இளைய சகோதரவகையில் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** வழக்கமான பணிகளில் மட்டும் ஈடுபடவும். தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். பிள்ளைகளுக்காக செலவுசெய்யவேண்டி இருக்கும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முடிவுகளை யோசித்து எடுப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# யாருக்கு தண்டனை ?

2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுமிக்கு, மருத்துவத்தவறால் மணிக்கட்டுடன் கை அகற்றப்பட்ட விடயத்தில், பொலிஸாரின் பூர்வாங்க விசாரணைகள் இன்னமும் முடிவுக்கு வந்தபாடில்லை. இந்த விடயத்தில், தாதியர்கள் சிலரைக் கைதுசெய்திருந்த பொலிஸார், அவர்களை நீதிமன்றத்தில் முன்னிறுத்தியதுடன், அவர்களிடம் வாக்குமூலத்தையும் பெற்றுக்கொண்டனர். ஆனால், அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? என்றால், 'இல்லை' என்பதே ஒற்றைப்பதில். ஏறத்தாழ இரண்டரை வருடங்களாக, முன்பின் முரணான நிலைப்பாடுகளைக் கூறியும், ஒன்றோடொன்று தொடர்பற்ற கருத்துகளை முன்வைத்தும் 'நீதிமன்றத்துக்குத் தண்ணிகாட்டும்' நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனரே அன்றி, இரண்டரை வருடங்கள் என்ற காலக்கனதிக்கு ஏற்ப இந்த வழக்கு நகரவில்லை என்பதே நிதர்சனம்.

பொலிஸாரின் இத்தகைய மெத்தனப் போக்கையும், முறையற்ற செயற்பாட்டையும் கடுமையாகக் கண்டித்துள்ளார் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் உசைன். நீதிபதி உசைனின் அறச்சீற்றத்தை எண்ணற்ற மக்களின் மனங்களில் கனன்று கொண்டிருக்கும் கோபக்கனலின் பிரதிபலிப்பாகவும் கொள்ளமுடியும். பல்லாயிரம் வழக்குகள் இலங்கையில் இன்னமும் விசாரிக்கப்படாமலும், முறையான விசாரணைகள் இன்றியும் தேங்கிக் கிடக்கின்றன. இதற்குக் காரணமாக நீதிக்கட்டமைப்பில் உள்ள குறைபாட்டைத்தான் காலம்காலமாகக் கூறி வருகின்றோம். ஆனால், பொலிஸ்துறை போன்ற நீதி பரிபாலனத் திணைக்களங்களின் மந்தமான செயற்பாடே எண்ணற்ற வழக்குகளின் தாமதத்துக்குக் காரணமாக உள்ளது என்பதே கசப்பான உண்மை.

இந்தத் தாமதம், வார்த்தையால் அளந்து எழுதிவிட முடியாத பாதிப்பை மக்களுக்கு ஏற்படுத்துகின்றது. உடல், உள ரீதியாக மக்களைப் பலவீனத்துக்கும், விரக்திக்கும் உட்படுத்தும் பிரதான காரணியாகவும் அமைகின்றது. உதாரணமாக, 17 வயதுப் பெண் பிள்ளையொன்றுபாலியல்வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டால், சந்தேகநபருக்கு எதிரான குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படுவதற்கு குறைந்தது இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இதை மேலும் இழுத்தடிப்பதற்கு ஏராளமான நெகிழ்வுத்தன்மைகள் சட்டத்தில் உள்ளன. அதன் பின்னர் வழக்கு நடைபெற்று தீர்ப்பு வெளிவருவதற்கு சராசரியாக நான்கு ஆண்டுகள்வரை தேவைப்படுகின்றன -அல்லது தேவைப்படுத்தப்படுகின்றது. ஆக, 17 வயதில் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட அந்தப்பிள்ளைக்கான நீதி, அவரின் திருமண வயதிலேயே கிடைக்கின்றது. அதுவரையும் அந்தப் பெண்பிள்ளை நீதிமன்றப்படிகளை அடிக்கடி ஏறி இறங்கவேண்டியிருக்கும். இது, அந்தப் பிள்ளையின் குடும்ப வாழ்க்கை உட்பட ஏராளமான விடயங்களில் மீளமுடியாத தாக்கத்தை ஏற்படுத்தும். குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனையைக் காட்டிலும், இது 'பாரதூரமான' தண்டனை. இந்த இடைப்பட்ட காலத்தில், குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிப்பதற்குச் சாத்தியங்கள் உள்ளன. அவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் இடம்பெற்றிருப்பதும் பதிவே.

எனவே, நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கம், நீதிமன்றத்தை மையப்படுத்தி தன் சிந்தனையைச் செலுத்தாமல், நீதியைப் பரிபாலனம் செய்யும் பொலிஸ்துறை போன்ற திணைக்களங்களின் செயற்பாடுகள் சரியானதுதானா? அவற்றால் ஏற்படும் தாமதம் தகுமா? என்ற பரிசீலனையில் ஆத்மார்த்தமாக ஈடுபடவேண்டும். பாதிப்புக்கு உட்பட்ட தரப்பு, 'அறிவிக்கப்படாத தண்டனையை' அனுபவிக்கும் இந்தச் சபிக்கப்பட்ட போக்குக்கு விரைவாக முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு**

**பொருள்:** ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை; அறத்தைப் போற்றாமல் மறப்பதைவிடக் கெடுதியானதும் இல்லை.




# இணையவழி பணமோசடி; பொதுமக்கள் அவதானம்




**கொழும்பு, பெப்.1**
**வங்கி அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என நாடகமாடி இணையவழி ஊடாகப் பொதுமக்களை அச்சுறுத்தி பணமோசடியில் ஈடுபடும் குழுவினர் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு எச்சரித்துள்ளது.**

இதுதொடர்பில் சமீப நாள்களாகப் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மோசடிக்காரர்கள் பிரபல வங்கிகளின் பெயர்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்குப் போலிக் குறுஞ்செய்திகளை அனுப்புகின்றனர்.

அத்தோடு வட்ஸ்அப் செயலி மூலம் வீடியோ அழைப்புகளை ஏற்படுத்தி, பொலிஸ் சீருடை அணிந்த நபர் ஒருவர் தோன்றித் தன்னை ஒரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் என அடையாளப்படுத்தி மில்லியன் கணக்கில் மோசடி செய்துள்ளார்.


இவ்வாறு சந்தேகத்திற்குரிய அழைப்புகள் ஏதும் கிடைக்கப்பெறும் பட்சத்தில், உடனடியாக உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கங்கள் ஊடாகப் பொலிஸ் நிலையம் அல்லது வங்கியை நேரடியாகத் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# மகள் கொலை; தந்தை கைது

காலி, பெப்.1
காலியில் உரகஸ்மன்ஹந்திய பகுதியில் தனது மகளைக் கோடரியால் தாக்கிக் கொலை செய்த குற்றச்சாட்டில் தந்தையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இந்தக் கொலைச் சம்பவம் பதிவாகியுள்ளது. உயிரிழந்தவர் 14 வயதுடையவராவர்.

தொலைபேசித் தகராறு காரணமாக தந்தை மகளைத் தாக்கியுள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ச-இ)





# பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, பெப்.1
2025 டிசெம்பர் மாதம் 2.1 சதவீதமாகக் காணப்பட்ட முதன்மைப் பணவீக்கம் ஜனவரி மாதம் 2.3 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. அதேபோல் உணவுப் பணவீக்கம் கடந்த மாதம் 3.0 சதவீதமாக காணப்பட்ட நிலையில் இம் மாதம் 3.3 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. உணவல்லாத பணவீக்கத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. சுகாதாரம், கல்வி ஆகிய துறைகளுக்கான பணவீக்கம் இந்த மாதம் குறைவடைந்துள்ளது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. (ச-இ)

# இஸ்ரேலில் வன்புணர்வு; இலங்கையர் கைது

ஜெருசலேம், பெப்.1
இஸ்ரேலிலுள்ள விசேட தேவையுடையோர் பாடசாலை ஒன்றில் கல்விபயிலும் மாணவி ஒருவரைப் பாலியல் வன்புணர்வு செய்த குற்றச்சாட்டின் கீழ் இலங்கையர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதனை இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது. மேலதிக விசாரணைகளுக்காக தற்போது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

# ஜோன்ஸ்டனின் மறியல் நீடிப்பு

கொழும்பு, பெப்.1
முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அவரது இரண்டு மகன்கள் உட்பட ஐவரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வத்தளை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

லங்கா சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி உட்பட பல வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் அவர்கள் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு விவசாயக் கண்காட்சி முல்லைத்தீவில் கோலாகலம்



**முல்லைத்தீவு,பெப்.1**
**'காலநிலைச் சவால்களை எதிர்கொண்டு நிலைபேறான விவசாயத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளில் வடக்கு மாகாண விவசாயக்கண்காட்சி, ஒட்டுசுட்டான் விவசாயப் பயிற்சி நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.**



முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், டித்வா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிக ளுக்கு, இழப்பீடு வழங்கும் செயற்பாடும் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. கண்காட்சியில் காலநிலைச் சவால்களை எதிர்கொண்டு நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளல், தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு, சேதன உரத்தயாரிப்பு, கால்நடை வளர்ப்பு, சுதேச வைத்தியப் பயிர்ச்செய்கை, ஒருங்கிணைந்த விவசாயம் உள்ளிட்ட பல்வேறு விவசாயச் செயற்பாடுகள் குறித்து விளக்கங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், உபாலி சமரசிங்க, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ, வடமாகாண விவசாயப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-19,35,246)

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு தானியக் களஞ்சிய நிதியுதவி



கிளிநொச்சி, பெப்.1
தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் ஏற்பாட்டில் விவசாயிகளின் தானியக் களஞ்சியங்களை மேம்படுத்தும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கனகாம்பிகைக் குளம் நெல் களஞ்சியசாலை அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது தெரிவு செய்யப்பட்ட 15 விவசாயிகளுக்கு தலா 45,000 ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.
தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ரோகித பிரசாந்த முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கி வைத்தார். நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். மோகனபவன் மற்றும் நிறுவனத்தின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (ச-113)

# கோரக்கண்கட்டு வீதி காப்பெற் வீதியானது



கிளிநொச்சி, பெப்.1
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நாடு தழுவிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது காணப்பட்ட கோரக்கண்கட்டு வீதி, 45 மில்லியன் ரூபா நிதியில் காப்பெற் வீதியாக மாற்றப்பட்டு மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.
கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கோரக்கண்கட்டு வீதி பல வருடங்களாகக் குண்டும் குழியுமாகச் சிதைந்து காணப்பட்டது. இதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் அம்புலன்ஸ்கள் பயணிக்கமுடியாத நிலை காணப்பட்டது.
விவசாயிகள் தமது விளைபொருள்களைக் கொண்டுசெல்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.
வீதியைச் சீரமைக்கக்கோரி இந்தப் பகுதி மக்கள் கடந்த காலங்களில் பல போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர்.
இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் வீதிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் நேரடித் தலையீட்டின் மூலம் இந்த வீதிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. c (ச-113)



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள குருதித்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இரத்ததானமுகாம் ஒன்று யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் சீனிவாசகம் இந்திரகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (ச-21)

# யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் தேசிய சாதனையாளர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.1
ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான தேசியமட்ட ரென்னிஸ் போட்டியில் வெற்றி யீட்டிய யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினரால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.
அகில இலங்கை ரெனிஸ் சம்மேளனத்தால், தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான ரென்னிஸ் போட்டியில், இந்தக் கல்லூரியைச் சேர்ந்த இரு அணிகள் சிறப்பு வெற்றியைப் பெற்றன. சிவப்பு நிறப்பந்துப்பிரிவில் தரம் 2 மாணவர்கள் சம்பியன் கிண்ணத்தையும், செம்மஞ்சள் நிறப்பந்துப் பிரிவில் தரம் 4 மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். அத்துடன் பச்சை நிறப்பந்துப் பிரிவில் தரம் 5 மாணவர்கள் காலிறுதிச் சுற்றுக்கும் தெரிவாகி கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர். இவ்வாறு தேசிய மட்டத்தில் சாதனைபடைத்த மாணவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (க)




# செல்லப்பா சுவாமிகளின் குருபூசை

யாழ்ப்பாணம்,பெப்.1
நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை, நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீடப் பீடாதிபதி சர்வேஸ்வரன் குருக்கள் பத்மநாபன் கலந்து கொண்டு, புத்திரப் பாக்கியம் எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மல்லாவி மருத்துவமனையில்

# புனரமைப்பில்லாத பிரேத அறை பாதை தள்ளுவண்டிகளே தள்ளாடும் அவலம்

**முல்லைத்தீவு,பெப்.1**


**முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் ஆகிய இரு பிரதேச மக்களின் பிரதான மருத்துவத் தேவைக்கான இடமாக விளங்கும் மல்லாவி ஆதார மருத்துவமனையில் பிரேத அறைக்குச் செல்லும் பாதை புனரமைக்கப்படாமல் உள்ளமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுவருகின்றனர்**

மருத்துவமனையில் அனர்த்தங்கள் அல்லது விபத்துகளின் போது உயிரிழப்பவர்களின் உடல்கள் இங்கேயுள்ள பிரேத அறையிலேயே வைக்கப்படுவது வழமை. எனினும், மருத்துவமனையின் பிரதான கட்டடத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பிரேத அறைக்குச் செல்லும் பாதை, நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால், உயிரிழந்தவர்களின் உடல்களைத் தள்ளுவண்டிகள்மூலம் கொண்டு செல்லும்போது, சீரற்ற பாதையால் பணியாளர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கடும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இது குறித்து மருத்துவமனை நிர்வாகமோ அல்லது நோயாளர் நலன்புரிச் சங்கமோ எவ்வித அக்கறையும் காட்டவில்லை என்றும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ச-35)

## ஆலயங்களுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,பெப்.1

யாழில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மத வழிபாட்டுத் தலங்கள் இரண்டுக்கு, தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் அண்மையில் வழங்கப்பட்டன. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயம் மற்றும் மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயம் ஆகியவற்றுக்கே இந்தக் காசோலைகள் வழங்கப்பட்டன. குறித்த ஆலயங்களை மீளமைப்பதற்கான காசோலைகளை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி, ஆலய நிர்வாகசபையினரிடம் கையளித்தார். (க-27)





## வட்டு.இந்துவின் கால்கோள் விழா

யாழ்ப்பாணம்,பெப்.1

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் தரம் 6 இல் புதிதாக இணையும் மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா மற்றும் பொங்கல் விழா ஆகியன அண்மையில் இடம்பெற்றன. கல்லூரியின் அதிபர் மாணவர்களுக்கு மலர்ச்செண்டுகளை வழங்கி வரவேற்றார். தொடர்ந்து பிரதி.அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், புதிதாக வருகைதந்த மாணவர்களை வரவேற்றனர். (க-27)

வரணி. இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் பொங்கல் விழா, வித்தியாலய அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தைத்தாய் எனும் தொனிப்பொருளில் கருத்துரையாற்றினார். (க-159)





முல்லைத்தீவு சுற்றுலாக் கடற்கரையில் மாபெரும் பட்டத்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. வட்டுவாகல் புலம் பெயர் உறவுகள் மற்றும் வட்டுவாகல் கிராமமக்களின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன், கரைதுறைப்பற்றுப் பிரதேசசபையின் செயலாளர் திருமதி இராஜயோகினி ஜெயக்குமார், கரைதுறைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர், பெருந்திரளான மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(எ-41-246)





## 'அன்புள்ள டைரிக்கு' கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.1

இணுவில் பொதுநூலக கலை கலாசாரத் துறையின் ஆதரவில், இணுவில் கலை இலக்கிய வட்டம் நடத்திய கவிதாயினி வித்தியா பாரதியின் அன்புள்ள டைரிக்கு கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு, இணுவில் பொதுநூலகக் கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாதபிள்ளை குமரனும், நூல் மதிப்பீட்டுரையை பேராதனைப் பல்கலைக்கழகம் வாழ்நாள் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரனும் நிகழ்த்தினர். நூலின் முதற்பிரதியை நாராயணபிள்ளை கருணாகரன் மற்றும் ஆறுமுகம் செல்வராசா தம்பதிகள் பெற்றுக்கொண்டனர். தொடர்ந்து நூலாசிரியர் கௌரவிப்பு இடம்பெற்றது. (க-66,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாரிவனம்
# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
## சாவகச்சேரி
# பாலஸ்தாபனம்

வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அன்னையின் அன்பர்களே!

சாவகச்சேரியில் வாரிவனத்தில் முத்துமாரியாக வீற்றிருக்கும் அன்னைக்கு பாலஸ்தாபன கும்பாபிஷேகம் செய்வதற்கு அன்னை அருள் பாலித்துள்ளார். எனவே, அன்னைக்குரிய பாலஸ்தாபனமானது, மங்களகரமான விசுவாச வருடம் தை மாதம் 18ம் நாள் இன்று (01.02.2026) ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி திதியும் பூச நட்சத்திரமும் சித்த யோகமும் மீன லக்கினமும் கூடிய காலை 09.09 மணி முதல் 10.51 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் அன்னையின் திருவருளுடன் இனிதே இடம் பெறவுள்ளது. அனைத்து அம்மன் அடியவர்களும் காலை இடம்பெறும் பாலஸ்தாபனத்திற்கு வருகை தந்து அன்னையின் அருளைப் பெற்றுக் கொள்ளவும்.

**பரிபாலனசபை,**
**வரிவனம் ஸ்ரீ முத்துமாரிஅம்மன் கோயில்,**
**சாவகச்சேரி.**
**0777634074**

(CS/60562) J-1

விற்பனை உத்தியோகத்தர்கள்
## SALES OFFICERS



இலங்கையில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் முன்னனி நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை உத்தியோகத்தர்கள் தேவை.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னார் முல்லைத்தீவு திருகோணமலை மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து விண்ணப்பிக்கலாம். மோட்டார் சைக்கிள் வைத்திருக்க வேண்டும், அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
**070 707 2949**

**RBD தேங்காய் எண்ணெய், RBD சூரியகாந்தி எண்ணெய் மற்றும் RBD மரக்கறி எண்ணெய் விற்பனைக்கு**

உயர் தரத்திலான RBD தேங்காய் எண்ணெய், RBD சூரியகாந்தி எண்ணெய், RBD மரக்கறி எண்ணெய் ஆகியவை போத்தல்களில் மற்றும் கேன்களில் மொத்த விற்பனைக்கு உண்டு.

வட மற்றும் கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் எமது விநியோக சேவைகள் உள்ளன.

மேலதிக விபரங்களுக்கு:
**070 707 2949**

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள வீட்டில் தங்கிவேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் - 70,000/-
தொடர்பு:- **072 838 1760**
(CR/46994) J-1

## காணி உடனடி விற்பனைக்கு

யாழ். அரியாலையில் 24 பரப்பு குடியிருப்புக் காணி உடனடி விற்பனைக்கு. 3 அறை வீடு, 2 கிணறுகள், 40 தென்னை மரங்கள் கொண்டது. A-9 கண்டி வீதி 200 மீ தூரத்தில். யாழ். நகர் 15 நிமிடம்.
விபரங்களுக்கு:
**074 300 7992**
**WhatsApp +44 7414 942508**

## வேலையாட்கள் தேவை

விற்பனை உதவியாளர் தேவை.
தொடர்பு முகவரி:
**310A, ஆஸ்பத்தரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(மக்கள் வங்கி அருகாமையில்)**

## மலிவு விற்பனை

**இன்றும் நாளையும் ஒரே விலையில்**
**1 பூங்கன்று வாங்கினால்**
**1 பூங்கன்று இலவசம்.**
**யாழ் சிற்றி பாம்**
**755, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.**
தொடர்புகளுக்கு:-
**075 944 4601**
(CS/60601) J-1

NALIN Information Technologies Pvt Ltd.

# SMART PANEL OFFER

MEGA OFFER

## February 01-14 ம் திகதிகள் வரை

**TOP BRANDS**
Horion
HIKVISION
Riotouch
UNV
GOC




பாடசாலைகள் , கல்வி நிறுவனங்களுக்கான மாபெரும் விலைக்கழிவுகள்

எமது நிறுவனத்தால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு 200 க்கு மேற்பட்ட **Smart Panels & Smart Boards** வழங்கி வைக்கப்பட்டுள்ளது

**65",75",85",95" Size Available**

FREE

**STARTING PRICE - RS: 280000/=**

**2 - 3 Years Warranty**




முற்பதிவு செய்யும் முதல் 15 வாடிக்கையாளர்களுக்கு MS OFFICE GENUINE VERSION இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு
Thushyanthan - 076 359 4366
Smart Panel களை எமது காட்சியறையில் நேரில் வருகை தந்து பார்வையிடலாம்

**Free Installation - Free Delivery ( Jaffna District )**

Terms & Conditions Apply

**NALIN IT** Mon-Sat Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610
No : 195/2, Parameswara Junction Palaly Road Jaffna


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஏடு தொடக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 1
இணுவில் பொதுநூலகச் சிறுவர் திறன் விருத்தி மையத்தில் தைப்பூச நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணி முதல் நண்பகல் 12 மணிவரை சிறார்களுக்கு ஏடு தொடக்குதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. சிறுவர் திறன் விருத்தி மையத்தில் புதிய மாணவர்களை இணைக்கும் நிகழ்வு இன்று காலை 8 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை இடம்பெறும்.

(ச-66)


### வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு வேலையாட்கள் தேவை.
தகமை :- கணனி அறிவு , O/L or A/L
தொடர்புகளுக்கு:- 077 932 7235
(CS/60598) J-1

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் Tile பதிக்கப்பட்ட மூன்று அறைகள் கொண்ட வீடொன்று இரண்டு குளியலறை வசதியுடனும் (ஒன்று இணைந்த குளியலறை) வாகனத் தரிப்பிட வசதியுடனும் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 070 715 5589
(CS/60589) J-1

### மணமகன் தேவை

யாழ் கிறிஸ்தவம் NON R.C (V)
மணமகளுக்கு படித்த உத்தியோகம் செய்யும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (உள்நாடு மட்டும்.)
தொடர்புகளுக்கு:- 070 554 0384
(CS/60600) J-1

### CANADA VISA

Canada செல்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும். VISA வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
077 706 2499
(CR/46997) J-1

### வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் உணவகத்திற்கு சமையல் உதவியாளர்கள் மற்றும் உணவு பரிமாறுபவர் (ஆண்,பெண்) தேவை. தங்குவதற்கு வசதி செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு:-
077 171 3163
(CS/46999) J-1

### பணியாளர் வெற்றிடம்

- மின்சார உபகரணங்கள், அலங்கார மின் விளக்குகள் விற்பனையகத்திற்கு கணனி அறிவுடன் கூடிய விற்பனையாளர் (பெண்கள்)
- முன் அனுபவம் விசேட தகமையாக கொள்ளப்படும்.
- முன் அனுபவம் உடையவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும்.
- பழக விரும்புவபர்களும் விண்ணப்பிக்கலாம்.
ஆக குறைந்த கல்வித்தகமை (சாதாரண தரம் - O/L)
✓ EPF/ ETF கொடுப்பனவு வழங்கப்படும்.
✓ நிரந்தர அதாழில்
★ சுயவிபரக்கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும்.

ESS JEY ELECTRICAL
No.09, STANLEY ROAD, JAFFNA.
021 - 222 2564 / 021 - 222 7430
(CS/60581) J-1

### வேலைவாய்ப்பு

அண்ணாமலையான்
ஸ்ரீ ராகவேந்திரர் எண்டர் பிறைசஸ் லிமிட்டட்
(A.S.R.WEDDING HALL) க்கு

★ Watcher ★ Cleaner
★ Electrician ★ Account Assistant (கணக்கு பதிவாளர்)

ஆகியவற்றிற்கு வேலையாட்கள் தேவை.நாற்பது வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. BIO DATA, National Identity card Photocopy, நற்சான்றிதழ் பத்திரம் முன்பு வேறு ஸ்தாபனத்தில் வேலை செய்து இருப்பின் அதற்குரிய சான்றிதழ் கடிதம் (Character Certificate) உம் உடன் கொண்டு வரவும். 9.00am - 12.30pm நேரில் வரவும்

ANNAMALAIYAN
SRI RAGAVENTHIRAR ENTERPRISES (PVT) LTD
No.542.KKS ROAD, JAFFNA.
T.P: 0767446064
(CS/60603) J-1



# தைப்பூசம்

காலம்: 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்

## உலகப் பெருமஞ்சத்திருவிழா - 2026

- பால்குடப்பவனி
- மாபெரும் பொங்கல்
- உலகப் பெருமஞ்சம் வீதியுலா பாரம்பரிய கலை, கலாச்சார நிகழ்வுகள்



காலம் 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை இன்று காலை 6.00 க்கு இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து 1008 பால்குடப் பவனி ஆரம்பமாகும். காலை 09.00 மணிக்கு ஆலயத்திற்குச் சொந்தமான வயலில் இருந்து பாரம்பரிய முறைப்படி புதிர் எடுத்து வந்து மாபெரும் பொங்கல் ஆரம்பமாகி பிற்பகல் 02.00 மணிக்கு நிறைவுபெறும். நண்பகல் அன்னதான நிகழ்வு இடம்பெறும். இரவு 6.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம்பெற்று நூற்றாண்டு பழமைவாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதிவலம் வரும் நிகழ்வும், தமிழரின் கலை, கலாச்சார நிகழ்வுகளான ஈழத்தில் தலைசிறந்த தவில், நாதஸ்வர கலைஞர்களின் சங்கமமும், பறை, தப்பு, கோலாட்டம், கம்பியாட்டம், பரதநாட்டியம், தீப்பந்தம் சுற்றுதல், கம்படி, சிலம்பு, குதிரையாட்டம், கரகம், காவடி போன்ற தமிழரின் பாரம்பரிய நிகழ்வும் இடம்பெறும்.

**முருகன் அடியவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்............**

V.K.R INTERNATIONAL (PVT) LTD
BRIGHTEN YOUR FUTURE WITH US

- அனைத்து வகையான விமான டிக்கெட்டுகள்
- Travel insurance
- Tour பக்கேஜ்கள்
- அனைத்து நாடுகளுக்குமான courier சேவை
- அனைத்து வகையான விசாக்கள்
- VFS appointments
- Travel insurance
- IELTS வகுப்புகள்
- விசாக்களுக்கு தேவையான வங்கி பணவைப்பு
- Hotel முன்பதிவுகள்
- Airport pickup Drop

அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்று கொள்ளலாம்

24/7 வாடிக்கையாளர் சேவை
077 055 1735
+94-74-218-3333 +94-21-728-4284

இப்போது பதிவு செய்யவும்
Info@vkrinternational.com
www.flyvkr.com

இடம்:
இலக்கம் 176/177 பெரியமதவடி,
கே.கே.எஸ் றோட், சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 14 . 10 . 1944

இறைவன் அடியில் 30 . 01 . 2026



## இராசபூபதி மார்க்கண்டு

யாழ் அல்லாரையை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை, தற்போது யாழ் அல்லாரை சங்கிலிக் கிணற்றடியில் வசித்து வந்தவருமான இராசபூபதி மார்க்கண்டு அவர்கள் கடந்த (30.01.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான (சோதிடர்) கந்தையா - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தபால்கார வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மார்க்கண்டு (ஆனையிறவு தேசிய உப்பு கூட்டுத்தாபன உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், விபுலராணி, கிருஷ்ணகுமார், செல்வகுமார், குமுதினி, முகுந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரத்தினம், தங்கராணி, ரதிமலர், சிவகுமார், அமுதா ஆகியோரின் அன்பு மாமியாரும், இராசலக்சுமி, கந்தராசா, செல்வரத்தினம், திலகவதி, வசந்தாதேவி, காலஞ்சென்ற ஜெயலக்சுமி, மீனாம்பிகை, விஜயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிநவன், ஆதிகா, அஞ்சனா, அபிமன்யூ, அர்ச்சுனா, அனோஜன், அக்ஷயா, பிரியன், ஆரணி, அருணன், சுபோதினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2026) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:-
077 939 3471
0049 170 881 0000
0049 177 569 9502
0033 783 710 006
0044 794 969 7057

(CS/60613) J-1

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 11 . 1948

மறைவு 29 . 01 . 2026



(CS/60607) J-1

## முத்துக்குமார் புவனேஸ்வரி

பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும், மீசாலை மற்றும் கைதடி குமரநகரை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமார் புவனேஸ்வரி அவர்கள் கடந்த (29.01.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணன் - லக்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்துக்குமார் அவர்களின் அன்பு மனைவியும், முகுந்தினி (UK), முரளிதரன் (UK), முகுந்தா (UK), முரளினி (UK) ஆகியோரின் அன்புத் தாயும், சிவராசா (UK), பகுனா (UK), சிவலிங்கம் (UK), சுகிர்தன் (UK) ஆகியோரின் மாமியாரும், டினோசன் (UK), சனுஜன் (UK), யனுசா (UK), கபின் (UK), அக்சஜா (UK), கனுஜன் (UK), நிந்துசா (UK), கிருசன் (UK) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (01.02.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைப்பெற்று பூதவுடல், தகனக்கிரிகைக்காக கைதடி ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.


தகவல்: குடும்பத்தினர்
குமரநகர், கைதடி மத்தி

# நினைவலைகள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11.03.1944

மறைவு 12.02.2025



### சுப்பிரமணியம் பரமேஸ்வரன்

திதி : தை பறுவம்

எத்தனை முறை கேட்டாலும்
அத்தனை முறையும் அள்ளித்தந்த
அன்புகளை இழந்து விட்டோம்

இறுதிவரை எல்லாம் தந்து
இறக்கும்வரை உன்னை தந்து
அமுது என்ற அறிவை தந்து
பிரிவு என்ற நோவை தந்தது சரியா?

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31.07.1945

மறைவு 16.01.2024



### சொர்ணாம்பிகை பரமேஸ்வரன்

திதி : வளர்பிறை பஞ்சமி

நூறாயிரம் முறை அம்மா என்றாலும்
முகம் சுழிக்க மாட்டீர்
தத்தித் தாவினாலும்
திட்டி முறைத்தாலும் எம்மிடம்
தித்திக்க கதை வளர்ப்பாய்
இன்னும் சிலகாலம் வாழ்வீர்கள்
என்று எண்ணியிருந்த எமக்கு
இன்று கவிதை எழுத வைத்ததேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் !!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(CS/60595) J-1

உங்கள் பிரிவால் துயருறும்
மகள்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# தைப்பூசம்

யாழ்ப்பாணம், பெப். 1

வரலாற்றுச்சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் தைப்பூச உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெறவுள்ளது.

மாலை 4 மணியளவில் சாயரட்சைப் பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து இரண்டாம் காலப் பூஜை இடம்பெறும். மாலை 4.30 மணியளவில் வசந்தமண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து முருகப் பெருமான் வீதி உலா வரும் திருக் காட்சி இடம்பெறும். (ச-66)

✦ ✦ ✦ ✦ ✦ ✦

வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத் தைப்பூச உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் நடைபெறவுள்ளது.

முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து முருகப் பெருமான் உள்வீதி எழுந்தருள்வார் என ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ ந.ரங்கநாதக்குருக்கள் தெரிவித்துள்ளார். (ச-66)

## சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் நிறுவனமொன்றுக்கு சாரதி தேவை



- 30 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டவர் விரும்பத்தக்கது
- வேலைநேரம் - காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- வாரத்தில் ஒருநாள் விடுமுறை வழங்கப்படும்
- கொழும்பு வீதிகளில் போக்குவரத்து பரிட்சையம் உள்ளவராக இருத்தல் வேண்டும்
- கல்வித் தகமை - O/L சித்தியடைந்திருக்கவேண்டும்

**அனுபவம் மற்றும் பணி ஆகியவற்றின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படும்**

தொடர்புக்கு:- **077 120 9998**

## தேவை

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அரைக்கும் ஆலைக்கு பில் கிளார்க், பொதியிடல், பயிலுனர், அனுபவம் உள்ளவர் என்பவற்றுக்கு ஆண், பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு: **076 29 77 078**

(CS31121)A

## மேற்பார்வையாளர் தேவை

கண்டியில் உள்ள எமது விடுதிக்கு சகல வேலைகளும் தெரிந்த (All Rounder) தேவை. சிங்களம் பேச தெரிந்திருத்தல் வேண்டும். தங்குமிடம், உணவு இலவசம்.

சம்பளம் பேசி தீர்மாணிக்கப்படும்.

**T.P: 074 111 6725**

## அலுவலக உதவியாளர் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்தில் அலுவலக உதவியாளர் (ஆண்கள்) தேவை.**


**வர்த்தகம் படித்தவர்கள்**

தொடர்புகளுக்கு:-

**077 2323 000**

(CS/60619) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
06 . 10 . 1952

மறைவு
29 . 01 . 2026

### சோமசுந்தரம் சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் மாணிப்பாயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மூத்த விநாயகர் கோவிலடி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சுப்பிரமணியம் அவர்கள் கடந்த 29.01.2026 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2026) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் (நல்லூர்) நடைபெற்று, பூதவுடல் சுதுமலை அம்மன் கோயிலடியில் உள்ள அவரது இல்லத்தில் 15 நிமிடம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொலைபேசி இல:**
**077 74 64 405**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 31122) A

## மரண அறிவித்தல்



மலர்வு
24 . 12 . 1935

உதிர்வு
30 . 01 . 2026

### கனகசபை பாலசுப்பிரமணியம்

**(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)**

சூராவத்தை, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (30.01.2026) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - அன்னப்பிள்ளை (சூராவத்தை, சுன்னாகம்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகுமார் (பிரான்ஸ்), சியாமளா (பிரான்ஸ்), சிறீதரன் (பிரான்ஸ்), சிவச்செல்வி (இத்தாலி), சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கங்கா (பிரான்ஸ்), சாந்தமேனன் (பிரான்ஸ்), சுகந்தி (பிரான்ஸ்), சிறீகரன் (இத்தாலி), றஜீவன் (அதிபர் - மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம், இளவாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிந்துஜா, சாதனா, சதுர்சன், சிவச்செல்வன், சிவப்பிரிதா, சுதன், சிந்துஜன், லதுசன், லதுசிகா, சுஜன், சாருக்கா, சரவணன், சங்கீத், விதுர்சிஹன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சத்தியசிவபாலன், மற்றும் காலஞ்சென்றவர்களான குணரட்ணம், சீவரத்தினம், மகேஸ்வரி, சிவபாக்கியம், கணேசபிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, துரையம்மா, கார்த்திகேசு, இராமசாமி, சித்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2026) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**உயரப்புலம்,**
**ஆனைக்கோட்டை.**

CS/31119) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**+94 76 050 6065**

## மரண அறிவித்தல்



தோற்றம்
05 . 10 . 1935

மறைவு
30 . 01 . 2026

### யாதவராஜன் மகேஸ்வரி

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கு, யாழ்ப்பாணத்தை தந்காலிக வதிவிடமாகவும் கொண்ட யாதவராஜன் மகேஸ்வரி அவர்கள் கடந்த 30.01.2026 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - ஐயாத்தைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், ஐயம்பிள்ளை - வேலாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யாதவராஜன் அவர்களின் அன்பு மனைவியும், வரதராஜன், விவேகானந்தன், திருமாவளன், மணிவண்ணன், நக்கீரன், வானதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாதேவி, கமலராணி, ஜெயக்குமாரி, குகனேந்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், எழில், பூரணி, இளமதி, ஆதிரை, யாழினி, இனியாள், சரவணன், அமிழ்தினி, செந்தூரன், சுமுகன், ஆனந்த், இலக்கியன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2026) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் ஊரெழு பொக்கனை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**விவேகானந்தன் - 076 9047 828**
**நக்கீரன் - 076 6710 333**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 6474 629**
**076 2629 547**

(CS/31123) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜித வழக்கு ஒத்திவைப்பு

கொழு., பெப்.1 மணல் அகழ்வுத் திட்டமொன்றை கொரிய நிறுவனமொன்றுக்கு வழங்கியதன் ஊடாக அரசாங்கத்துக்கு இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட இரண்டு பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே ஜூலை 10ஆம் திகதி ஒத்திவைத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)


## வேலையாட்கள் தேவை

தொண்டமனாறில் உள்ள கடை ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை. (கணக்கு தெரிந்தவர்)
மாத சம்பளம் - 60000/-
தொடர்புகளுக்கு:-
077 803 7866
(CS/60618) J-1

## தவறிவிட்டது

எனது BIJ 6303 எனும் இலக்கமுடைய Dio மோட்டார் சைக்கிளின் பின்பக்க இலக்கத் தகடு K.K.S. வீதி அரசடி சந்தியிலிருந்து மானிப்பாய் வீதியூடாக காக்கை தீவின் மீன் சந்தை பகுதியிலும், K.K.S. வீதி, ஆடியபாதம் வீதி, வழியாக கட்டைபிராய் பகுதியிலும் தவற விடப்பட்டுள்ளது. எனவே கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்காணும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 66 36 384
077 57 29 620

## கிடுகு வழங்குநர்களுக்கான கூறுவிலை கோரல்

ஆனையிறவு உப்பளத்துக்கு சுமார் 80,000 கிடுகுகள் (07 அடி நீளம் 10 அங்குல அகலம்) வழங்குவதற்கான மூடப்பட்ட கூறுவிலை கோரப்படுகின்றது. மாதமொன்றுக்கு சராசரியாக 10,000 கிடுகுகள் விநியோகிக்கக் கூடியவர்கள் 14.02.2026 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக தகவல்களையும் 021 3204556, 0742023334 என்ற தொலைபேசி ஊடாகவும் nationalsaltepass@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

முகாமையாளர்
ஆனையிறவு உப்பளம்
A9 வீதி, ஆனையிறவு.

(CR 47002) A

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 110 ரூபாய்
077 334 1281
(CR/46998) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொட்டடியில்
(Hospital Road)
காணி விற்பனைக்கு.
நேரடி தொடர்பு: 071 170 4120
(CR/45000) J-1

## முக்கிய அறிவித்தல்

**அடகு நகை விற்பனை அறிவித்தல்**
**ராஜ் ஜுவல்லர்ஸ் திருநெல்வேலி**

01.07.2024 ஆம் திகதி தொடக்கம் 31.12.2024 ஆம் திகதி வரை அடகு வைத்த நகைகளை 10.03.2026 ஆம் திகதிக்கிடையில் மீட்டுக்கொள்ளவும். அல்லது முழு வட்டியையும் செலுத்தி புதுப்பித்துக்கொள்ளவும். தவறின் 10.03.2026 ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டுவிடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

**தற்போது அடகு தொகை 1 பவுண் 22 K ற்கு 300,000/= வழங்கப்படுகிறது.**

இல.31C ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
(சந்தைக்கு அருகில்)
021 221 7287, 076 636 1238


## மரண அறிவித்தல்

பிறப்பு
30 . 03 . 1959

இறப்பு
30 . 01 . 2026



**சூரியகுமார் உமாதேவி**

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் 135/14A இராசவீதி, கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சூரியகுமார் உமாதேவி அவர்கள் கடந்த (30.01.2026) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சோமாவதி தம்பதியரின் அன்பு மகளும், சூரியகுமாரின் ஆருயிர் மனைவியும், பிறேம்குமார், ராஜ்குமார் (UK), உதயகுமார், சாந்தகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலேஸ்வரி, அனுசா (லண்டன்), றொசின், குகனேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விஸ்னுவர்மன், டீவிகா, அபிஸ்மன் (லண்டன்), அக்சயன் (லண்டன்), ஆதீஸ் (லண்டன்), ஹரிஷ், ஹரினி, குந்தவி, குகப்பிரியா, ரோஹித், சாஹித்தியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், த.மனோரஞ்சிதம், மு.மகேஸ்வரி, சி.முத்துலட்சுமி, மு.வாசுதேவன், கி.செஞ்சுலட்சுமி, மு.வரதராஜன் (மா.வீ), மு.கங்காதரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.02.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 774 9419
135/14A இராஜவீதி, கோப்பாய்

(CS/60605) J-1

Estd. 1994.09.30 Regd.No.

**வடமாகாண வங்கி ஓய்வுநிலை வங்கியாளர் நலன்புரிச் சங்கம்**
**Northern Province Banks' Pensioners' Association**

TEMPORARY ADDRESS;
Mr.S.NADARAJAH (SECRETARY)
41/15, CHAMPIAN LANE, KOKUVIL

Dear Sir/Madam,

**GENERAL MEETING**

You are cordially invited to the General Meeting of the above Association which will be held on Saturday the 14th February 2026 at 9.30 a.m. and the felicitation Lunch thereafter.

VENUE :- VAN..NAVALAR MAHA VIDYALAYAM,
Manohara Cinima Theater Junction,
K.K.S.Road, Jaffna.

AGENDA: -
Announcements
- ★ Presidential Address Mr. Arulananthan - (Rtd. Regional Manager NSB Jaffna)
- ★ Read and Adopt the Minutes of the last Annual General Meeting held on 10.08.2024
- ★ Reading & Adoption of the Statement of Accounts by the Treasurer
- ★ Discussion with the Association's Members -

- ▶ Any other Business
- ▶ Vote of Thanks
- ▶ Get together and Lunch

- ✣ Please accept this notice as Personal Invitation
- ✣ We regret our inability to send Individual Invitations.

S.Nadarajah
Secretary
Contact No.0773553002

(CS/60617) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ...

இலங்கையின் அண்மைக்கால அரசியல் விவகாரங்கள் தொடர்பில், முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ஊடக சந்திப்பை நடத்தியுள்ளார். இதன்போதே, வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்கள் இராணுவ முகாம்களைத் தமது பாதுகாப்பாகக் கருதுகின்றனர் என்று கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தைப்பொங்கல் விழாவுக்காக யாழ்ப்பாணம் சென்ற ஜனாதிபதி அநுர, தமிழ் மக்களின் மனங்களில் பிரிவினையை விதைத்துள்ளார். சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் எனக் காண்பிக்க முனைந்துள்ளார். தமிழர்களின் வாக்குகள் ஏனைய ஜனாதிபதிகளை விட, ஜனாதிபதி அநுரவுக்கே அதிகமாக் கிடைத்தன. எனவே, சிங்கள மக்களைக் காட்டிக் கொடுத்தாவது வடக்கைத் திருப்திப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி அநுர எண்ணுகின்றார்.

வடக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, தெற்கிலும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான வகையில் முகாம்களை அகற்றக்கூடாது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சிக்காலத்தில் முகாம்களின் எண்ணிக்கையை நாமும் குறைத்தோம். ஆனால், முற்றாக நீக்காமல் தேவையானவற்றைத் தக்கவைத்தோம். ஏனெனில், இராணுவ முகாம்கள் அவசியமானவை.

சில தமிழ் அரசியல்வாதிகள் வலியுறுத்தினாலும் வடக்கிலிருந்து படைகளை முழுமையாக வெளியேற்ற அங்குள்ள மக்கள் விரும்பவில்லை. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையானளவு படைகள் இருக்க வேண்டும். தேவையானவைதான் வடக்கில் உள்ளன. அவற்றை அகற்றக்கூடாது - என்றார். (அ-ம-44)

## மாவை...

யாழ்.இந்திய துணைத்தூதர் சாய் முரளி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிலையைத் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் போராளிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், பத்மநாதன் சத்தியலிங்கம், ஞானமுத்து சிறிநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன், யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, வடமாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் மாவை சேனாதிராசாவின் குடும்பத்தினர் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மாவையின் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் பிரதம அறங்காவலர் சா.செ.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் வருகைதரு விரிவுரையாளரும், இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவருமான மறவன்புலவு க.சச்சிதானந்தன் நினைவுப் பேருரை ஆற்றினார். நினைவுப் பேருரையைத் தொடர்ந்து 'மாவை சோ.சேனாதிராஜா முதலாமாண்டு நினைவுமலர்', பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் எழுதிய 'ஈழ அண்ணல் சோ.மாவை சேனாதிராஜா' ஆகிய இரு நூல்களும் வெளியிடப்பட்டன. (அ-ம-26-66)

## நாமல்,...

மனைவி ஷிரந்தி ராஜபக்சவுக்கும், மஹிந்தவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சிரிலிய சவிய திட்டம் தொடர்பான விசாரணைக்காக ஜனவரி மாதம் 27ஆம் திகதி முன்னிலையாகுமாறு ஷிரந்தி ராஜபக்சவுக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், தனிப்பட்ட காரணங்களால், அந்தத் திகதியில் விசாரணைக்கு வரமுடியாது என்றும், பிறிதொரு திகதியை வழங்குமாறும் ஷிரந்தி ராஜபக்ச கோரிக்கை விடுத்திருந்தார்.

இதையடுத்தே, பெப்ரவரி மாதம் 3ஆம் திகதியன்று விசாரணைக்காக வருமாறு ஷிரந்திக்கும் நாமல் ராஜபக்சவுக்கும் தற்போது புதுப்பிக்கப்பட்ட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## வாக்காளர்...

மையை உறுதிப்படுத்தும் வகையில், அவ்வப்போது வாக்காளர் பட்டியல் மீளாய்வுக்கு உட்படுவது வழமையாகும். இந்த வருடத்துக்கான மீளாய்வு நடவடிக்கைகளே நேற்று ஆரம்பித்துள்ளன. இதன்படி, கிராம உத்தியோகத்தர்கள், தேர்தல் திணைக்கள பணியாளர்கள் இணைந்து வீடு வீடாக மக்களின் விவரங்களைத் திரட்டவுள்ளனர்.

மே மாதம் 31ஆம் திகதியன்று 18 வயது பூர்த்தியாகும் அனைவரையும் உள்ளடக்கியே இந்த வாக்காளர் மறுசீரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## என்று...

மாவட்டச் செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ள வை.எம்.சி. மண்டபத்தில், ஸ்ரீலங்காவின் சுதந்திரதினமான பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி, மாலை 3 மணி தொடக்கம் 5 மணிவரை இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு மாகாணசபையின் முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான என்.சிறிகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம், அரசியல் விமர்சகர் நிலாந்தன் ஆகியோர் இந்தக் கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர். தமிழ்த் தேசியப் பேரவை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## 71குற்றவாளிகளுக்கு...

குற்றப்பின்னணி உள்ள பலர் தொடர்ச்சியாகத் தேடப்பட்டு வருகின்றனர். அவர்களில் 71 பேருக்கு எதிராக, சர்வதேசப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள அவர்களைக் கைதுசெய்வதற்கு சர்வதேசப் பொலிஸார் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (அ-ம)

## முல்லை...

ஏற்பட்ட நிலநடுக்கம் என்பதால், இதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. எனினும், முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த சிலரால் இந்த நிலநடுக்கத்தை உணரக்கூடியதாக இருந்திருக்கும் - என்றார். இதேவேளை, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சிலர், இந்த நிலநடுக்கத்தைத் தம்மால் உணரக்கூடிய வகையில் அமைந்ததாக உதயனுக்குத் தெரிவித்தனர். (அ-ம-110)

## அத்தியாவசியமாக...

மானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு எவ்விதத் தடைகளும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்கில், அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அண்மைக்காலமாக போராட்டங்களும், தொழிற்சங்க நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. இத்தகைய பின்னணியிலேயே, அத்தியாவசியம் தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம)

## கணக்காய்வாளர்...

அரசியலமைப்பு பேரவை நேற்று கூடியது. இதன்போது ஜனாதிபதியால் புதிய பரிந்துரை முன்மொழியப்பட்டது. அந்தப் பரிந்துரை தொடர்பில் ஆராய்வதற்கு கால அவகாசம் கோரப்பட்டது. இதற்கமையவே பெப்ரவரி 3ஆம் திகதி அரசியலமைப்பு பேரவை கூடி தீர்மானம் எடுக்கவுள்ளது. கணக்காய்வாளர் நாயக நியமனம் தொடர்பில் நாட்டில் இடம்பெறுவரும் கருத்தாடலை வரவேற்கின்றோம் - என்றார். (அ-ம-44)

## பிரஜாசக்தி...

வலி.கிழக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது, கிவுல் ஓயா திட்டம், பிரஜா சக்தி திட்டம் என்பவற்றுக்கு எதிராக தவிசாளர் நிரோஷ் கண்டனத்தீர்மானம் கொண்டுவந்தார். அத்துடன், இந்தத் திட்டங்களை எதிர்த்துப் பேரணி ஒன்றை நடத்துவதற்கும் சபையின் அனுமதியைக் கோரினார். இதற்கு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து, சபையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. எனினும், பெரும்பான்மை அடிப்படையில் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ-ம-20)

## திஸ்ஸ...

இன்றும் தொடரவுள்ளது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர், பாதிக்கப்பட்ட பொதுமக்களுடன் இணைந்து மாதாமாதம் முன்னெடுக்கும் இந்தப் போராட்டம் நேற்றுச் சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அருகில் ஆரம்பமாகி மாலை 6 மணி வரை இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக, இன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர் போராட்டம் நடைபெறவுள்ளது.

நேற்றைய போராட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், கட்சியின் பரப்புரைச்செயலாளர் ந.காண்டீபன், கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். போராட்டம் நடைபெற்ற பகுதிக்கு அருகில் பொலிஸாரும், புலனாய்வாளர்களும் குவிக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)


# பெற்றோல் விலை 2 ரூபா குறைப்பு!

கொழும்பு, பெப். 1

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த விலைச் சூத்திரத்தின் அடிப்படையில், ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

92 ஒக்ரேன் பெற்றோலின் விலையே இவ்வாறு விலைக் குறைப்புச் செய்யப்பட்டு புதிய விலையாக 292 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. டீசலின் விலையும் 2 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலையாக 277 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், சுப்பர் டீசல், மண்ணெண்ணெய் மற்றும் 95 ஒக்ரேன் பெற்றோல் ஆகியவற்றின் விலைகளில் எந்த மாற்றமும் ஏற்படாது என்று இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை ஆயருக்கெதிராக ஒட்டப்பட்ட சுவரொட்டிகள்!

திருகோணமலை, பெப்.1

திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், திருகோணமலை நகரின் பல்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இதுதொடர்பாகத் திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டைத் தொடர்ந்து விரைந்து செயற்பட்ட பொலிஸார், நகரின் பல்வேறு இடங்களில் ஒட்டப்பட்டிருந்த அனைத்துச் சுவரொட்டிகளையும் அகற்றியதுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ச-50)


## சாரதி தேவை (Mahindra Bolelo)

யாழ். மாவட்டத்தினுள் வசிப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0777 80 70 25 (CS/60612)A

## வேலையாட்கள் தேவை

உரும்பிராயில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பொதிசெய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 443 4604 (CS/60604) J-1

## ENGLISH CLASSES

Zoom அல்லது தனியாகவும் அல்லது குழுவாகவும் வீடு வந்து கற்பிக்கப்படும்.

Students, Workers and for University students

*Grammar *Spoken

T.P: 077 33 14 608 (CS 31126) A

## பெண் வேலையாள் தேவை

பருத்தித்துறை அல்வாய் வடமேற்கில் வீட்டு வேலை பார்ப்பதற்கு தங்கி நின்று வேலை பார்க்க கூடிய பெண் வேலையாள் தேவை. (சம்பளம்- 30,000 + பேசித்தீர்மானிக்கலாம்)

தொடர்புகளுக்கு: 077 078 4411, 077 659 3951 (CS/60599) J-1

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய பகுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 074 101 1873 (CS/60614) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மருதனார்மட சந்தியில் 2 பரப்பும் 3 குளியுடைய காணி விற்பனைக்கு உண்டு. கல்வி நிறுவனங்கள், வணிகமையங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் அருகில் உள்ளது.

தொடர்புகளுக்கு: 071 833 4751, 077 327 5864 (CS/60597) J-1

## பணியாளர் தேவை

முதியோர் இல்லைத்தில் பணியாற்றுவதற்கு பணியாளர் தேவை. தங்கி இருந்து பணியாற்றுவது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- 077 564 4303 (CS/60609) J-1

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழில் பிரபலமான ஹோட்டல் ஒன்றிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. தகுந்த சம்பளமும், உணவும் வழங்கப்படும். (இந்த துறையில் 1 வருட முன் அனுபவம் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

தொடர்புகளுக்கு:- 070 789 6621, 070 789 6620, 070 789 6618 (CS/60616) J-1

## வேலையாள் தேவை

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.

➤ பாரவூர்தி சாரதி

தொடர்புகளுக்கு: 076 096 9728

## வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள செல்லப் பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாள் தேவை.

ஆண் சம்பளம்: 60000/= (தங்குமிடம் உண்டு)

பெண் சம்பளம்: 35000/= - 40000/=

தொடர்பு: 077 937 0000, 075 988 1000

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இரண்டு பரப்பு காணியில் அமையப் பெற்ற 03 மாடி வர்த்க நிலையம் விற்பனைக்குண்டு. வாங்குபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் முகவர்கள் வேண்டாம்.

தொடர்புக்கு... 077 363 2276

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ (V) அரச உத்தியோகம் பார்க்கும் (A/L) 1985 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:- 070 606 8453 (CS/60606) J-1

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் செல்லமுத்து மைதானத்திற்கு அருகாமையில் பாதை ஓரமாக இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட மூன்று காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு. மானிப்பாய் கொமர்சியல் வங்கி 300 மீற்றர்.

தொடர்புகளுக்கு:- 077 912 2789, 077 018 6171, 077 130 7456 (CS/60611) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1994 ல் பிறந்த B.Tech, MSc in Artificial Intelligence பட்டதாரி, தனியார் நிறுவனத்தில் Senior Machine Learning Engineer (Software) ஆகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் 2ல் செவ்வாயும் 32 கிரகபாவமும், சுவாதி நட்சத்திரமும், துலா ராசியும் கொண்ட மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 923 9314 (CS/60560) J-1

## வீடுகள் வாடகைக்கு

சுண்டுக்குளி குருசேல்ட் வீதியில் அமைந்துள்ள வீட்டின் முதலாம் மாடியில் அமைந்துள்ள படுக்கை அறைகள், கோல், சமையலறை, குளியலறை அடங்கலான இரண்டு வீடுகள் வாடகைக்கு உண்டு.


☆ சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை

☆ பரியோவான் கல்லூரி

☆ யாழ்ப்பாணக் கச்சேரிக்கும் அருகாமையில் உள்ளது.

தொடர்புகளுக்கு:- 077 606 7026, 077 476 7936, 077 618 4636 (CS/3110) J-1


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 • 01 • 1933

மறைவு 12 • 02 • 2025

கடந்த 12.02.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### பூபாலசிங்கம் இராஜேஸ்வரி

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே......
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டியவரே
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த
எங்கள் அன்புத்தெய்வம்
அனைந்து ஓராண்டு உருண்டோட
எங்கள் மனம் அம்மாவை தேடி நிற்கிறது.

இராஜ வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

(CS/60594) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி


Registered as a Newspaper

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 தை 11 ஞாயிற்றுக்கிழமை (01.02.2026)

வல்லைவெளி வீதியிலே வேகமாக வந்தவர்கள்
நல்லபல்லும் நான்குபக்கம் போயிடவே – சொல்லியழ
வல்லமையும் இல்லாமல் வந்தார்கள் வீட்டுக்கு
செல்லமகன் மோதியதால் சங்கு.

பொன்.சுகந்தன்

# என்.பி.பி.யின் பயங்கரவாதிகள்?



○ நிலாந்தன்

இப்போது இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்குப் பதிலாக, பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டத்தை அரசாங்கம் உருவாக்க விளைகிறது.

இந்தச்சட்டத்துக்கான வரைவு பொதுமக்களின் கருத்துகளை அறிவதற்காக நீதி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்குள் தெரிவிக்கலாம். அவ்வாறு மக்கள் கருத்துக்களை அறியும் நோக்கத்தோடு தமிழ்ப் பகுதிகளில் கருத்தரங்குகள்,செயலமர்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றன.

இப்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டமானது 1979 ஆம் ஆண்டு கொண்டுவரப்படுகையில் அது தற்காலிகமானது என்று கூறப்பட்டபோதும்,1982ஆம் ஆண்டு அது நிரந்தரமாக்கப்பட்டது. பிரித்தானியாவிடமிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்து இதுவரை 77 ஆண்டுகளாகின்றன. இந்தக்காலப் பகுதியில் கிட்டத்தட்ட அரைவாசிக்கும் மேலான காலப்பகுதி அதாவது 46 ஆண்டுகள் இந்த நாடு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்தான் ஆளப்பட்டு வருகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் விமர்சன பூர்வமான கட்டுரைகளைத் தொகுத்து 2009 ஆம் ஆண்டு 'மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்' - CHRD) ஒரு நூலை வெளியிட்டது. அந்நூலின் அறிமுக உரையில் பேராசிரியர் ஜெயதேவ உயாங்கோட பின்வருமாறு கூறுகிறார்...." இலங்கையின் காலனித்துவத்துக்குப் பிந்தைய அரசியல் வரலாறு ஒரு தனித்துவமான பரிமாணத்தைக் கொண்டுள்ளது.1971 முதல் பெரும்பாலான ஆண்டுகளில் நாடு ஏதேனும் ஒரு வகையான விதிவிலக்குச் சட்டதின்கீழ் - அவசரகாலச் சட்டம் அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியவற்றின் கீழ்- ஆளப்பட்டுள்ளது. 1971மார்ச்சில் அவசர நிலை அமுலுக்கு வந்தது. அது 1976 வரை தொடர்ந்தது. ஒரு குறுகிய கால இடைவெளிக்குப் பிறகு, 1978 இல் அவசரநிலை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்த ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்தடுத்த ஆண்டுகளில்,இலங்கை மக்கள் அவசரகாலச் சட்டம் அல்லது பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லாமல், அவ்வப்போது,மிகக்குறுகிய காலத்திற்கு மட்டுமே சாதாரண சட்டத்தின்கீழ் வாழ வாய்ப்புக் கிடைத்தது. இவ்வாறு,சாதாரண சட்டம் விதிவிலக்காக இருந்து வருகிறது. இந்தக் கதையை சற்று நாடகத்தனமான மொழியில் மீண்டும் கூறினால், 1971 முதல். இலங்கையில் அவசரகாலச் சட்டம் 'சாதாரண' சட்டமாக இருந்துவருகிறது. மேலும் சாதாரண சட்டமானது,'அவசரகாலச் சட்டத்தின்' நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது".

அதாவது கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக நாடு அசாதாரணச் சட்டங்களின்கீழ் ஆளப்பட்டு வருகிறது. ஏன் அவ்வாறு ஆளப்பட்டு வருகிறது?

ஏனென்றால் தமிழ் எதிர்ப்பை பயங்கரவாதமாக வியாக்கியானப்படுத்தக்கூடிய ஒரு சட்டச் சூழலை தொடர்ந்தும் பேணுவதே தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த எல்லா அரசாங்கங்களின் நோக்கமாகவும் இருந்துவந்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அல்லது அதுபோன்று ஏதோ ஒரு சட்டத்தை தமிழ் மக்களின் தலைக்கு மேல் தொங்கவிடுவதன் மூலம் தமிழர்களைத் தொடர்ந்தும் அச்சுறுத்தி வைத்திருக்கலாம்.

15 மாதங்களுக்கு முன்பு மாற்றத்துக்கு வாக்களித்து ஆட்சிக்கு வந்த என்.பி.பி.யின் கொள்கையும் அதுதானா? பயங்கரவாதத் தடைச்சட்டமானது தமிழ் மக்களை மட்டும் பாதிக்கவில்லை. சிங்கள, முஸ்லிம் மக்களையும் பாதித்திருக்கிறது. அதனால் அதிகமாக பாதிக்கப்பட்ட சிங்கள அமைப்பு ஜே.வி.பி.தான். ஜே.வி.பி. யின் இரண்டாவது போராட்டத்தின்போது ஆயிரக்கணக்கானவர்கள் கைதுசெய்யப்படவும், சித்திரவதை செய்யப்படவும்,கொல்லப்படவும்,காணாமல் ஆக்கப்படவும் தேவையான அரசியல், இராணுவச் சூழலை அந்தச் சட்டம்தான் உருவாக்கியது.

இவ்வாறு சிங்கள மக்கள் மத்தியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு தரப்பை அடித்தளமாகக் கொண்ட தேசிய மக்கள் சக்தியானது, அச்சட்டத்தின் தன்னுடைய 'வேர்ஷனை' கொண்டுவர முயற்சிக்கின்றதா?

கிட்டத்தட்ட 15 மாதங்களுக்கு முன்பு மாற்றத்தை வாக்களித்து ஆட்சிக்கு வந்த ஒரு கட்சி, சிங்கள மக்கள் மத்தியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட ஓர் இயக்கத்தை அடித்தளமாகக் கொண்ட ஒரு கட்சி,ஆட்சிக்கு வந்தபின் அதே சட்டத்தின் கீழ் இதுவரை 49 பேர்களை கைதுசெய்திருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அகற்றுவோம் என்று தமிழ் மக்களோடு சேர்ந்து சில ஆண்டுகளுக்கு முன்பு வரை போராடிய ஓர் அமைப்பு,இப்பொழுது அந்தச் சட்டத்தின் புதிய 'வேர்ஷனைக் 'கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றது.

இந்த இடத்தில்தான் தமிழ் மக்கள் கற்றுக்கொள்ளவேண்டிய அடிப்படையான கோட்பாட்டு விடயம் ஒன்று உண்டு.சட்டம் என்பது புனிதமானது அல்ல. அது தேவசபையில் நிறைவேற்றப்படுவதும் அல்ல.சட்டங்களை மனிதர்களே நிறைவேற்றுகிறார்கள். அந்த மனிதர்கள் யார் என்றால்,ஒரு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருப்பவர்கள். எனவே ஒரு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருப்பவர்கள் தாங்கள் ஆட்சி செய்யத் தேவையான சட்டங்களை உருவாக்குகிறார்கள். இலங்கைத் தீவில் சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடாளுமன்றங்கள் அவ்வாறு தமிழ் மக்களை ஒடுக்கத் தேவையான சட்டங்களை உருவாக்கி வந்திருக்கின்றன.இங்கே அவர்களுடைய நோக்கம் தமிழ் மக்களின் எதிர்ப்பைபயங்கரவாதமாக வியாக்கியானப்படுத்தக்கூடிய ஒரு சட்டச் சூழலைத் தொடர்ந்து பேணுவது தான்.

தமிழ் மக்களை ஒடுக்க அவர்களுக்கு ஒரு சட்டம் தேவை. இதற்கு மற்றொரு சட்ட உதாரணத்தையும் காட்டலாம்.பெருந்தொற்று நோய்க் காலத்தில் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் போராடியபோது அரசாங்கம் அவர்களைக் கைதுசெய்வதற்கும் போராட்டத்தைத் தடுப்பதற்கும் தனிமைப்படுத்தல் சட்டங்களை பிரயோகித்தது.அதாவது தமிழ் எதிர்ப்பைக் கையாள்வதற்கு அவர்களுக்கு ஏதோ ஒரு சட்டம் தேவை.அந்த அடிப்படையில் தான் இப்பொழுது தேசிய மக்கள் சக்தியும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் தன்னுடைய 'வேர்ஷனை' கொண்டு வர முயற்சிக் கின்றதா?

இங்கே ஆட்சியில் யார் இருக்கிறார்கள் என்பதல்ல பிரச்சினை. சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் ஆட்சிக்கொள்கை எது என்பதுதான் பிரச்சினை. இதில் மாற்றத்தை வாக்களித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியும் விதிவிலக்கு அல்ல என்பதைத்தான் புதிய சட்ட வரைவு காட்டுகிறதா?

ஆங்கிலத்தில் மிகவும் பிரபலமான ஒரு மேற்கோள் உண்டு. அது வருமாறு... "தென்னாபிரிக்காவில் நிற ஒதுக்கல் சட்டபூர்வமாக இருந்தது.ஜெர்மனியில் யூதர்களுக்கு எதிரான இன அழிப்பு சட்டபூர்வமாக இருந்தது.உலகில் அடிமை முறை சட்டபூர்வமானதாக இருந்தது.காலனித்துவம் சட்டபூர்வமானதாக இருந்தது. சட்டபூர்வமானது என்பது அதிகாரம் சம்பந்தப்பட்ட ஒரு விடயம்.அது நீதியின் பாற்பட்ட ஒரு விடயம் அல்ல"

தேசிய மக்கள் சக்தியின் அடித்தளமாக உள்ள ஜே.வி.பி. ஒரு போராட்ட அமைப்பாக, எதிர்க்கட்சியாக இருக்கும் வரை அது பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பாக நீதியின்பாற்பட்ட நிலைப்பாட்டை எடுத்தது.ஆனால் ஆளும் தரப்பாக வந்தபின் அது சிங்கள - பௌத்த அரசு கட்டமைப்பின் பாரம்பரியத்தை அப்படியே தொடர்கிறது என்பதைத்தான் புதிய சட்டவரைவு தமிழ் மக்களுக்கு உணர்த்துகின்றது.

ஜனாதிபதி தமிழ் மக்களை நெருங்கி வந்து அணைப்பதோ, செல்பி எடுப்பதோ, அல்லது அரைக்கால் சட்டையோடு பலாலியில் நடைபயிற்சி செய்வதோ மெய்யான மாற்றங்கள் அல்ல.மாறாக தமிழ் மக்களின் எதிர்ப்பை பயங்கரவாதமாக வியாக்கியானப்படுத்தக்கூடிய, அச்சுறுத்தலான சூழலை, சட்டச் சூழலை அகற்றுவதுதான் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் உண்மையான மாற்றம். ஜனாதிபதி பயமின்றி தமிழ் மக்களோடு படம் காட்டலாம் என்றால், தமிழ் மக்கள் ஜனாதிபதியை நெருங்கித் தொட்டுப் பழகலாம் என்றால்,பலாலியில் அவர் குறைந்தளவு மெய்க்காவலரோடு, அரைக்கால் சட்டையோடு நடைப் பயிற்சி செய்யலாம் என்றால்,நாட்டில் பாதுகாப்பான ஒரு சூழல் இருக்கிறது என்றுதானே பொருள்? ஆயின் யாரிடமிருந்து அரசைப் பாதுகாப்பதற்கு புதிய சட்டம் தேவைப்படுகிறது?

தமிழ் மக்கள் கேட்பது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என்றுதான். ஒரு புதிய சட்டத்தை கொண்டுவரவேண்டும் என்று அல்ல. தமிழ் மக்கள் மட்டுமல்ல, சில ஆண்டுகளுக்கு முன் நடந்த தன்னெழுச்சிப் போராட்டங்களை பின்னின்று இயக்கிய அமைப்புகளின் கூட்டும் அதைத்தான் கேட்கின்றது.


அந்தத் தன்னெழுச்சிப் போராட்டங்களின் கனிகளைத் தேர்தல் மேடைகளில் கவர்ச்சியாக மொழிபெயர்த்ததன் விளை வாகத் தான் தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது. எந்தத் தன்னெழுச்சிப் போராட்டங்களின் விளைவாக இந்த அரசாங்கம் உருவாக்கியதோ,அதே தன்னெழுச்சிப் போராட்டங்களை நசுக்கப் பயன்படுத்திய அதே சட்டத்தின் புதிய 'வேர்ஷனை 'கொண்டுவர முயற்சிக்கின்றதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
01 பெப்ரவரி 2026

# போரின் கவிதை



## நந்தினி 48

எங்கள் பக்கத்து வீடு
போராளிகளின் பயிற்சிக்கூடம்
மௌனமாகக் குவிக்கப்பட்ட
மரணத்தின் கிடங்கு.

ஒரு நாள்
தற்கொலைக்குத் தயாரான
உயிர்களோடு.....
வெடிகுண்டும் கிளம்பியது.
ஒற்றை நொடியில் அதன்
கணக்கும் குறித்த நேரமும்
தப்பியது.

அந்தப்பிரதேசமே குலுங்கிச்சரியும்
ஒலியில் குண்டு வெடித்தது....
நாங்கள் இருந்த இடமே இல்லை.

அதிர்ச்சியில் உறைந்தோம்
ஒவ்வொருவரையும் தேடிய நாங்கள்
நினைவு மீள்வதற்கு
பலநாள்கள் எடுத்தன....

அம்மா
இறந்தாள் என்று சொல்லி
பிணவறையில் வைக்கப்பட்டாள்.
மரணம் அவளை முழுதாக
எடுத்துச் செல்ல முடியவில்லை
எங்களைக் காப்பற்ற இறைவன்
அம்மாவைத் திரும்பத் தந்தான்.

தரைமட்டமான எங்கள் வீடு
அடையாளம் இழந்தது...
நினைவுகளுக்குக்கூட
சுவர்கள் இல்லை.

உறவினர்களின் வீடுகளில்
சில காலம்
உயிர் ஒளித்தோம்....
இடம் மாறாததால்
விருந்தாளிகள் எதிரிகள் ஆனோம்.

இருப்பதற்கு வீடின்றி அலைந்தோம்

பாவம் என அணைத்தவர்களால்
பலவந்தமாகத் துரத்தப்பட்டோம்.
நிரந்தர முகவரி இல்லாமல்
நாடோடிகளாக அலைந்தோம்.

வாடகை கொடுக்கவும் பணமில்லை
அதனால் வீடு தர யாருமில்லை
வளமான வாழ்வைச்
சீரழித்த ....
போரையும் போராளிகளையும்
வெறுத்தோம் ......

தரைமட்டமாகிப்போன இடத்தில்
புதிய மனை அமைக்கும்
வசதி எம்மிடமில்லை.
வானம் பார்த்து வாழ்வதெப்படி?

போராட்டத்தின் தலைவனுக்கு
ஒரு கடிதம் எழுதினேன்.
'கரும்புலிகளின் கவலையீனத்தால்
அம்மா இறந்து பிறந்தாள்
இருக்க இடமின்றி அலைகிறோம்
வறுமையின் கைகளோடு
வாழ வழியில்லை..
வாழ இடம் கேட்டு யாசிக்கின்றோம்'

என் பதினாறு வயதுப் புலமையோடு
நான் எழுதிமுடித்தேன்!

பல நாள்கள் பதில் இல்லை.
காற்றில் காகிதம் போல
அலைந்தோம்.

படிக்க, உறங்க இடமின்றி
உறவினரின் கோடிகளில்
குடியிருந்தோம்....

பிரச்சினைகள், சங்கடங்கள்
இளமையில் கேட்கக்கூடாத
வசைகளைக் கேட்டு முடித்தோம்...

போராளி ஒருவர் அனுப்பப்பட்டார்
அதிகாரத்தையும் நிர்வாகத்தையும்
கையில் வைத்திருந்தவர்
கடிதத்திற்கு பதிலளிப்பதாக
ஒரு வீட்டின் வாகனத் தரிப்பிடத்தை
வீடாக வாழும்படி
கைகாட்டினார்

கிணறும் மலசலகூடமும் இல்லாத .
நான்கு சுவர்களைக் கொண்ட இடம்

இளம் பிள்ளைகள் வாழ்வதற்கான
இடம் அல்ல ......

ஆனால் வேறு வழி இல்லை.
ஒன்பது உயிர்கள்
அங்கே குடியேறினோம்.
அவர்கள் தந்தது வீடு அல்ல

வீட்டின் கோடி, வாகனத்தரிப்பிடம்
ஆனால் வாழ்வதற்கான
அன்றைய ஒரே வழி அதுதான்..

வேறு வழியில்லை....
பறவைகள் எச்சங்கள் கழித்த
கொப்புகளும் மண்கிடங்கும்
எங்கள் இள வயது மரியாதையை
காத்தன....
மண்ணும் சாம்பலும்
கிருமி கொல்லியானது
கறையான்கள் தின்னும்
மடிந்த மண்களாக
துன்பங்கள் எம்மை அரித்தன...

தண்ணீருக்காக
பக்கத்து வீட்டு அம்மாவிடம்
பிச்சை கேட்டோம்.
கண்களில் வெட்கத்துடன்

பள்ளி செல்லவேண்டிய
அத்தனை பிள்ளைகளும்
தண்ணீர் இல்லாமல்
கண்ணீரில் மிதந்தோம்.
வெறும் வாளியுடன்
தண்ணீர் எடுக்கச்செல்லும்
தருணங்களிலெல்லாம்
பக்கத்துவீட்டு அம்மா
குற்றவாளிகளாய் எம்மை
கூண்டில் நிறுத்தினாள்...

அந்த வாலிப வயதில்
அடிப்படை வசதிகள் இன்றி
நாம் பட்ட துன்பங்களை

இன்று நினைத்தாலும் மிக
வெறுப்பாக உணர்கிறோம்...
கனவுகள் இல்லை.
இராணுவத்தின்
குண்டுகளுக்கும் வெடிகளுக்கும்
தப்பி...
போராளிகளின் குண்டுகளில்
தொலைந்து...
எல்லாம் இழந்து..
மரியாதைகள் தொலைந்து நின்ற
காலம் அது...

தண்ணீர் அள்ளுவதற்கு
அங்கலாய்க்கும் போதெல்லாம்
தீண்டத்தகாதவர்களாக
எம்மை வெறுத்து ஒதுக்கினர்.
காதில் கேட்கக்கூடாத
வார்த்தைகளை
கேட்டு முடித்தோம்.
அதனால் தண்ணீரின்
தேவை குறைந்தது!

வாலிப வயதில்
கனவுகள் காண
வேண்டிய காலத்தில்,
தூக்கமின்றித் தவித்தோம்.
'முன்னே வரக்கூடாத
பிள்ளைகளாக' வாழ்ந்தோம்
இன்று சமூகத்தில் நாம்
முன்னேறி[illegible]...

அந்தப் பழிவாங்கல் ஒலிகள்
இன்னும்
எங்கள் காதுகளில் கேட்கிறது......

எங்கள் இளமைக்காலம்
மகிழ்வின்றி அவமானத்தில்
மெல்ல மெல்ல நகர்ந்தது.

அப்பாவின் கூலி வரும்வரை
இரவு உணவுக்காக காத்திருந்தோம்.
பகலெல்லாம் பசி பேசும்...
இரவு வந்தால் வயிறு மகிழும்.

இரவில் கிடைக்கும்
கோதுமைமாப் பிட்டுக்கு
காத்திருந்தோம்.
படிப்பதற்கு ஒளி தரும் விளக்கில்லை

கண்கள் திறக்கமுடியாத இருளில்
கனவுகளைத் தொலைத்தோம்.
போராளிகளின் கூடாரத்தில்
கூலிக்கு வேலை செய்து
அப்பா பொட்டலங்களாக
கொண்டுவரும் உணவுகளை
சுவைக்கக் காத்திருப்போம்....

அந்தப் பசைமா பிட்டுக்கு
அடிமையானோம்....

ஆள் அடங்கிய இரவுகளில்
போரின் குழந்தைகள் உணவுக்காக
விழித்திருப்போம்.....
போருக்கு அழைத்தபோதெல்லாம்
போக மறுத்தோம்....
படிக்க வேண்டும், வாழவேண்டும்
என்றுதான்....
எங்கள் இளமை யோசித்தது!

எல்லாம் இழந்து..மீண்டும்
தொடங்கிய வாழ்வு...
ஆமைவேகத்தில் தான்
வாழ்வாதாரம் வலுப்பெற்றது.
பல அவமானங்களை
தாண்டிமெல்ல நிமிர்ந்தோம்.

எமக்கான கிணறு,மலசலகூடம்
அடிப்படைகளுக்கே
வட்டிக்குக்கடன் வாங்கிப்
பெற்றுக்கொண்டோம்.

உணவுக்கும், படிப்புக்கும்
கொஞ்சமும் இரங்காத
உறவுகளை மனதிலிருந்து
அழித்தோம்.

சொந்தமான தண்ணீர்
பெற்ற நாளில்
அத்தனை மகிழ்வு மனதில்...
[illegible]

வசை கேட்க வேண்டியதில்லை....
எமக்கான குருவிக்கூட்டில்
அடிப்படை வசதிகள் சேர்ந்தன...
இழந்தவற்றை மெதுவாக
சேகரித்தோம்....
கூடப்படிக்கும் பிள்ளைகளின்
வாழ்வும் எம்மைப்
புறக்கணித்தவர்களின்
நடத்தையும் அழியாத பொருளாக
ஆழ அழுந்திக்கொண்டன.

திடீரென்று மீண்டும் அவர்களின்
அதிகாரம்
புறப்படுங்கள் ஓடுங்கள் என்னும்
அவலம் அதிகாரத்தோடு....

கரும்புலிகளின் குண்டு வெடிப்பில்
எல்லாவற்றையும் இழந்தோம்.
இப்போது புதிதாய் சேகரித்த
சொத்துகளை விட்டு மீண்டும்
கோடிக்கரையினில் வாழும் அவலம்...

புத்தகங்களை மட்டும் எடுத்தோம்
விழுந்துகிடந்தோம்
மீண்டும் எழுந்தபோது
கால்களால் அடித்த வலி
தாங்கமுடியவில்லை....

ஆகாயம் மட்டும் தெரிந்தது..
பூமி பாதங்களின்
அழுத்தத்தின் வலியில் அழுதது...
தாங்காத.. வேதனையில்
நெஞ்சு தகித்தது....

குருவியின் கூட்டை மனிதன்
பிடுங்கி விழுத்துகிறபோது
வலியால் கதறும் குருவிகள் போல
அழுதோம்...
போராட்டத்தை வெறுத்தோம்
போராளிகளை வெறுத்தோம்..
வெறுப்பின் உச்சம் நாம்
போரில் இணைவோம்
என்னும் நினைவு
கனவானது.....

நாங்கள் ஐந்து பேர்..
அசையவேயில்லை

போராட்டத்தை வெறுத்தோம்!
மீண்டும் மீண்டும்
மாற்றான் கோடிகளுக்கு
வாழ்க்கைப்பட்டோம்...
பசிக்குப்புசிக்க ஏதுமின்றி
அலைந்தோம்
மீண்டோம் வைராக்கியம்
எம்மைக்
கட்டி எழுப்பியது...
உயிரோடு இருந்தோம்...

எம்மைப் புறக்கணித்தவர்
முன்னே வாழ்ந்து காட்டினோம்
அடிப்படைகள் இல்லாவாழ்வின்
பட்ட அவலங்களின்
வலிகளை உணர்ந்ததால்...
எம்மைப் போன்றவர்களையும்
தூக்கி நிமிர்த்தினோம்
வென்றோம்...வாழ்கிறோம்

ஆனால்...போர் கொடுத்த வலியும்
போராடியவர்கள் கொடுத்த காயங்களும்
மறக்கவே முடியாமல் உள்ளே
அரித்துக்கொண்டு
காலம் முழுவதும்...அழுத்தமாக
பதிந்து கிடக்கிறது ....

ஐயோ! அந்த நினைவுகள்
இளமையில் வறுமை
அந்தக் கொடுமைகளை
இத்தனை ஆண்டுகள் கழிந்தும்
எம்மால்
மறக்கமுடியவில்லையே!

ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஐரோப்பிய நாடுகளும் சீன - இந்தியப் போட்டியும்

## ஐரோப்பிய ஒன்றியம் – டில்லி, சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்து

## பீஜிங் சந்திப்பில் மூலோபாயக் கூட்டுறவுக்கு பிரித்தானியா இணக்கம்

## தமிழர்களின் எதிர்ப்பைச் சாதகமாக்கும் முயற்சியா?

அ.நிக்ஸன்





அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சமகால போக்குகள், மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனான உறவை பகைத்துக்கொள்வதால், சீனா-இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் ஐரோப்பிய நாடுகளுடன் அரசியல் பொருளாதார உறவுகளை பேண ஏட்டிக்குப் போட்டியாக முற்படுகின்றன.

இந்தியா ஏற்கனவே ஐரோப்பிய நாடுகளுடன் வலுவான உறவைப் பேணி வருகிறது. ஆனால் சீனா, இராஜதந்திர உறவு மற்றும் வர்த்தக ரீதியான தொடர்பாடல்களைத் தவிர, அரசியல் ரீதியான உறவுகளை ஐரோப்பிய நாடுகளுடன் சீரான முறையில் பேணமுடியாத ஒரு நிலைமை இருந்தது.

ஏனெனில் மேற்கத்தைய அரசியல் கோட்பாடுகள், சித்தாந்தங்களுக்கு சீன அரசியல் கோட்பாட்டு முறைமைகள் முற்றிலும் மாறானவை. இந்தக் காரண - காரியத்தால், மேற்கு ஐரோப்பிய நாடுகள், அரசுக்கு அரசு என்ற இராஜதந்திர உறவு மற்றும் வர்த்தக உறவுகளைத் தவிர, இராணுவ மற்றும் பிராந்திய பாதுகாப்பு விவகாரங்கள் உள்ளிட்ட ஏனைய பல விடயங்களில் சீனாவைத் தூரவே வைத்திருந்தன.

இந்தப் பின்னணியில் தான், ட்ரம்ப்பின் சமகால நகர்வுகள், ஏதோ ஒரு வகையில், சீனாவுடன் உறவைப் பேணத் தூண்டுகின்றன. இதனை மையமாகக் கொண்டே, ஐரோப்பிய நாடுகளுடன் இந்தியாவுக்கு ஏற்கனவே இருந்த உறவுகளை மேலும் இறுக்கமாக்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி புதிய உத்திகளை வகுத்துள்ளார்.

அதற்கிடையே சீனா முடிந்தவரையும் இந்தியாவுடன் உறவைப் பேண முற்படுகிறது. ஏற்கனவே சீன - இந்திய வர்த்தக உறவு முதற்தரமாக உள்ள நிலையில், இந்தோ - பசுபிக் பிராந்திய பாதுகாப்பு விவகாரத்தில் முரண்பாட்டில் உடன்பாட்டை ஏற்படுத்த சீனா விரும்புகிறது. சீன - இந்திய எல்லைப் பிரச்சினை என்ற ஒன்றைத் தவிர இந்தியாவுடன் வேறெந்த முரண்பாடுகளும் இல்லை என சீனாவின் அரச செய்தி ஊடகமான குளோபள் டைம்ஸ் (globaltimes) சுட்டிக்காட்டி யுள்ளது.

இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரத்தில் அமெரிக்கா வலிந்து மூக்கை நுழைக்கிறதே தவிர, இந்தியாவுடன் சீனாவுக்குப் பிரச்சினை இல்லை என்றும் அந்தச் செய்தித் தளம் சுட்டிக்காட்டுகிறது.

இந்த விடயங்களை எடுத்துக்கூறி, இந்தியாவுடன் சமாந்தரமான உறவைப் பேண சில நகர்வுகளை சீனா கையாளுகிறது. இந்திய - ரஷ்ய மரபுவழி உறவின் பிரகாரம், சீனா, இந்தியாவுடன் பிராந்திய பாதுகாப்புடன் கூடிய உறவைப் பேண முற்படுவதை சீன ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றன.

“சீனத் தொழில்நுட்ப வல்லமை எவ்வாறு இந்தியாவை 'உலகின் அலுவலகம்' ஆக முந்திக்கொள்ள உதவும்” என்ற தலைப்பில் எஸ்.சி.எம்.பி. (south china morning post) என்ற ஆங்கில செய்தித் தளம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது. மதிப்பை உயர்த்துவதற்கான பீஜிங்கின் இலட்சியம் டிஜிற்றல் சேவைகளின் முக்கியமான ஏற்றுமதியாளராக மாறுவதைக் காணலாம், உலகளாவிய உயர்நிலை வழங்குநர்களுக்கு இது சிறந்த வாய்ப்பு அதாவது, இந்தியா போன்ற நாடுகளுக்கு சாதகமானது என்றும் அந்தக் கட்டுரை சுட்டிக்காட்டியுள்ளது.

அதேநேரம், சீனா - இந்தியா - தாய்வான் உறவுகளைப் பகுப்பாய்வு செய்தல் என்ற தலைப்பில் ஸ்பொயின்லைன் (ispionline.it)) என்ற ஆங்கில செய்தித் தளம் சென்ற வாரம் எழுதிய கட்டுரையில், சீன- இந்திய எல்லை ஒப்பந்தம் தொடர்பாக விவரித்துள்ளது.

உலகின் இரண்டு பெரிய பொருளாதார நாடுகளுக்கிடையேயான உறவுகள் சீராவதற்குரிய சமீபத்திய அறிகுறியாக, ஐந்தாண்டுக்குப் பின்னர் சென்ற ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நேரடி விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இரு தரப்பினரும் அவ்வப்போது சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியதால் கடந்த ஆண்டில் இருந்து இந்தியா - சீனா உறவுகள் முன்னேற்றத்தின் அறிகுறியாகவும் அதனைக் கருதமுடியும்.

அதேநேரம், சர்ச்சைக்குரிய பிரதேசங்களில் எல்லைக் கண்காணிப்பு தொடர்பாக 2024 ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தம் பீஜிங்குக்கும் புதுடில்லிக்கும் இடையே இயல்பாக்குதல் செயல் முறையை ஆரம்பித்துள்ளதாக எஸ்.சி.எம்.பி. (south china morning post) என்ற ஆங்கிலச் செய்தி இணையத்தில் வெளியான மற்றொரு அரசியல் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், இருதரப்பு உறவுகள் இயல்புநிலையை அடைவதில் இருந்து வெகு தொலைவில் உள்ளன, மேலும் அவை பொருளாதார ஊக்குவிப்புகள் மற்றும் பிராந்திய பாதுகாப்பு பற்றி கவலைகளால் கட்டுப்படுத்தப்படுவதாகவும் அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேவேளை, இதே செய்தித்தளத்தில், ஆசியாவில் ஆயுதப் போட்டியை இந்தியா தூண்டுகிறதா அல்லது தடுப்பு இடைவெளியை மூடுகிறதா என்ற தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரை ஒன்று பிரசுரமாகியுள்ளது. சீன - இந்திய செய்தி ஊடகங்கள் இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் பற்றியும் அதேநேரம் பிராந்திய பாதுகாப்புகள் பற்றிய சந்தேகங்களை மாறி மாறி வெளியிட்டு வருகின்றன. பொருளாதார ரீதியாக இந்தியாவைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என சீனா அதிகளவில் விரும்புகின்றது என்பதை சீன அரச ஊடகங்களில் வரும் விமர்சனங்கள் காண்பிக்கின்றன.

ஆனால், இந்திய ஊடகங்கள் பிராந்தியப் பாதுகாப்பு விவகாரத்தில் இந்தியாவின் ஆதிக்கம் இருக்கவேண்டும் என விரும்புகின்றன. ரைம்ஸ் ஒப் இந்தியா (times of india) போன்ற ஊடகங்கள், சீனா மீதான நம்பிக்கை அற்ற தன்மைகளை பகிரங்கப்படுத்துகின்றன. இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் தனியொரு வல்லரசாக இருக்கவேண்டும் என சீன - இந்திய அரசுகள் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படும் பின்னணியில், டொனால்ட் ட்ரம்பின் சமீபத்திய நகர்வுகள் சீன - இந்தியப் போட்டியை மேலும் அதிகரித்துள்ளன.

இந்தப் பின்புலத்தில், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் ஆகியோர் பீஜிங்கில் சென்ற வியாழக்கிழமை சந்தித்து உரையாடியுள்ளனர். இரு நாடுகளும் நீண்ட கால, நிலையான விரிவான மூலோபாயக் கூட்டாண்மையை உருவாக்க வேண்டும் என்று ஒப்புக்கொண்டதாக சின் ஹவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ட்ரம்பின் செயற்பாடுகளினால் உலகம் இன்று கொந்தளித்துள்ளது. இதனால் சீனாவும் பிரித்தானியாவும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் மற்றும் முக்கியமான பொருளாதார அமைப்புகளில் நிரந்தர உறுப்பினர்களாக இருப்பதால், உலக அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை பராமரிக்க வேண்டிய அவசியம் பற்றி இரு தலைவர்களும் விரிவாகப் பேசியுள்ளனர்.

பிரித்தானிய - சீன வர்த்தக உறவை மேலும் விரிவாக்குவது பற்றியும் பேசப்பட்டிருக்கிறது. அதேவேளை, இந்தியாவும் 27 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியமும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் சென்ற 26 ஆம் திகதி திங்கட்கிழமை கைச்சாத்திட்டுள்ளன. அமெரிக்காவுடன் வர்த்தக வரிப் பாதிப்பை ஓரளவு சரிசெய்ய முடியும் என்ற நம்பிக்கையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இழுபறி நிலையில் இருந்தன. ஆனால், ட்ரம்பின் சமீபத்திய நகர்வுகளினால், 18 வருடங்களின் பின்னர் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாடுகளுடனும் இவ்வாறான ஒப்பந்தம் பற்றிய பேச்சுக்களை இந்தியா முன்னெடுத்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் இணங்கினால் இந்தியாவின் உலக அளவிலான வர்த்தக முயசிகள் மற்றும் பிராந்திய இராணுவ பாதுகாப்பு விவகாரங்களில் மேலும் முன்னேற்றங்கள் ஏற்படக்கூடிய தன்மைகள் இல்லாமலில்லை. அரசியல் கோட்பாட்டு முறைமைகளில் (Political theoretical systems) பிரித்தானியவை மையப்படுத்திய ஐரோப்பிய நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் உடன்பாடு இல்லை என்ற ஒரு காரணத்தினால், இந்தியா எடுக்கும் முயற்சிகள் சிலவேளை வெற்றியளிக்கலாம்.

ஆனாலும் வர்த்தகத்திலும், தொழில்நுட்ப முறைமைகளிலும் இன்று அதீத வளர்ச்சி அடைந்துள்ள சீனாவுடன், அரசியல் கோட்பாட்டு முறைகளைக் கடந்து உறவைப் பேண வேண்டிய ஒரு கட்டாயச் சூழல் பிரித்தானியாவுக்கு ஏற்பட்டுள்ளது. அதனை ஏனைய ஐரோப்பிய நாடுகளும் ஏற்கும் நிலைமை உண்டு. ஏனெனில், கோட்பாட்டு அரசியல் முறைமைகளில் இந்தியாவுடன் ஒத்துப் போகும் நிலைமை இருந்தாலும், உலக வல்லாதிக்கம் மற்றும் இராணுவ செயன்முறைகளில் சீனாவுக்கு இருக்கும் சக்தி, இந்தியாவிடம் இல்லை என்பது ஐரோப்பிய நாடுகளுக்குத் தெரியாத இரகசியம் அல்ல. ஆகவே, இறைமை, ஜனநாயகம், மனித உரிமைகள், இரு கட்சி அரசியல் செயற்பாடுகள் சீனாவிடம் இல்லை என்பதற்காக, இந்தியாவோடு மாத்திரம் தனித்து உறவைப் பேணக்கூடிய மனநிலை, ஐரோப்பிய நாடுகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மரின் (Keir Starmer) சீனப் பயணம் அந்த மன நிலையை வெளிப்படுத்தியுள்ளது. ஆகவே, டொனால்ட் ட்ரம்பின் தனிப்பட்ட முடிவுகளினால், ஏற்பட்டுள்ள சர்வதேச ஒழுங்குக் குழப்பங்களுக்குரிய தற்காலிகத் தீர்வாக, சீனாவுடன் உறவை பேண வேண்டிய கட்டாயச் சூழல் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளன. அதேநேரம் இந்தியாவுடன் ஏற்கனவே உள்ள உறவைப் பேணிக்கொண்டு, இந்தியா ஊடாக ரஷ்யாவுக்கு அழுத்தம் கொடுத்து, உக்ரைன் போருக்கு முடிவைக் காணவும் ஐரோப்பிய நாடுகள் முற்படுகின்றன.

ஆகவே, உலக ஒழுங்கு மாற்றத்தில் ஐரோப்பிய - சீனா உறவு, ஐரோப்பிய -இந்திய உறவு என்ற இரண்டு நிலைகள் உருவாகி வருகின்றன. ஆனால், இந்த உறவுகள் நிரந்தரமாக இருக்க முடியாது. ஏனெனில், இந்தியாவைப் பொறுத்தவரை அமெரிக்க உறவை வலிந்து நாடக்கூடிய ஏதுநிலை பகிரங்கமாகத் தெரிகிறது. ஏலவே இந்தியா இரட்டை வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றி வந்த ஒரு நாடு. குறிப்பாக இந்தோ- பசுபிக் பிராந்தியத்தில் தன்னைத் தவிர வேறு நாடுகள் வந்துவிடக் கூடாது என்பதில் இந்தியாவிடம் உள்ள ஆழமான விருப்பம், முரண்பாட்டின் உடன்பாடாக அமெரிக்காவுடன் ஓரக் கண் உறவுக்கும் வழிவக்கலாம்.

எதுவானாலும், தற்போதைக்கு அமெரிக்காவைக் கடந்து சீன - இந்திய நகர்வுகள் மாத்திரமே ஐரோப்பிய நாடுகளுக்கும் வாய்ப்பாகவுள்ளன. ஆனால், அவை நிரந்தரமான உலக ஒழுங்குக்குச் சாதகமா ,பாதகமா என்பதைப் பொறுத்திருந்தே அவதானிக்க வேண்டும். அதேவேளை, ஐரோப்பிய நாடுகளுடன் இந்தியா தற்போது கையாண்டு வரும் உத்தியும், இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரத்தில் இந்தியா அமெரிக்காவுடன் கையாளவுள்ள நகர்வுகளும் இலங்கைக்குச் சாதகமானவையே. ஆனாலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாக இந்தியாவுடன் உறவைக் காண்பித்துக் கொண்டு, மறுபுறத்தில் ஜே.வி.பி.யாக மீண்டும், இந்திய எதிர்ப்பு வெளிப்படுவதை டில்லி உணர்ந்துள்ளது போல் தெரிகிறது.

இதன் காரணமாக, அநுர அரசாங்கத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க டில்லி நிபந்தனையற்ற உதவி என்று அறிவித்திருக்கிறது. அத்துடன், தமிழர்களின் எதிர்ப்புகளைத் தமக்குச் சாதகமாக்கி, அநுர அரசாங்கத்தை மேலும் தமக்குரிய முறையில் மாற்றி அமைக்கும் உத்தி இருப்பதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. ஆகவே, தமிழ்த்தரப்பு புவிசார் அரசியல் போட்டியில் வல்லரசுகளின் அரசியல் பொருளாதார நலன்சார்ந்த உத்திகளைப் புறம்தள்ளி சுயாதீனமாகவும் நிதானமாகவும் செயற்பட வேண்டிய இறுக்கமான காலம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பிரியா சுபாஸ்கரன்

சஞ்சீவி சிறுகதை

# அவ
# தாயாகிறா

ஆர்ப்பரிக்கும் அலைகளையே பார்த்தபடி அமர்ந்திருந்தாள் துளசி. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து விரிந்து கிடந்தது கடல். கீழ்வானில் சூரியன் மெல்ல மெல்ல மேலேறிக்கொண்டிருந்தான். அலைகள் ஆக்ரோஷமாக மேலெழுவதும் வேகமாகக் கரையை நோக்கிப் பாய்ந்து வருவதும், வரும் வழியிலேயே தமது வேகத்தை இழந்து விட்டுத் திரும்பிச்செல்வதுமாக இருந்தன. வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தாலும் துளசிக்கு மனதில் அவை ஏதோ இல்லறவியல் தத்துவத்தைச் சொல்வது போலிருந்தன. அலைகள் எவ்வளவுதான் பலமாக ஆர்ப்பரித்தபடி கரையை நோக்கி வந்தாலும் அந்த இளகிய மணலிலே அவை தம் வீரியத்தை இழந்து சாந்தமாகி விடுகின்றனவே! எந்த அலையும் எழும் வேகத்துடன் கரைவரை வருவதில்லையே! கணவன் - மனைவி உறவும் அவ்வாறிருப்பின் இனிக்குமே இல்லறம். ஒருவர் கோபத்திற்கு மற்றவர் சாந்தமும், ஒருவர் வேதனைக்கு அடுத்தவர் ஆறுதலும் தேற்றிடுமே உணர்வலைகளை. ஆனால் இந்தச் சமூகமோ உணர்வுகள் என்றும் ஆணுக்குரியதென்றும் எப்போதும் அதற்கு வடிகாலாக இருக்க வேண்டியவள் பெண்தான் என்றும் எழுத்திலில்லா நியதியை வகுத்தது எவ்வகையில் நியாயம்? தனக்குத் தானே கேள்வி கேட்டுக்கொண்டாள் துளசி.

சுற்றுமுற்றும் பார்த்தாள். கடற்கரை மிகவும் பரபரப்பாகிக் கொண்டிருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் வழமையைவிட சனசஞ்சாரம் சற்று அதிகமாகவே காணப் பட்டது. துளசி காலை ஐந்தரை மணிக்கு முன்னதாகவே அங்கு வந்துவிட்டிருந்தாள். நேரம் போனதே தெரியவில்லை. அப்படித் தெரிந்தால் கூட அவள் யாருக்காக அவசரப்படவேண்டும்? அல்லது யார்தான் அவளைத் தேடப்போகிறார்கள்? இருந்த ஒரே ஒரு உறவான தாயையும் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இழந்துவிட்டாள். இப்போதெல்லாம் விடுமுறை நாள்களில் காலையிலேயே அந்தக்கடற்கரைக்கு வந்து இவ்வாறு நேரத்தைச் செலவிடுவது அவளுக்கு வழக்கமானதொன்றாகிவிட்டது என்பதைவிட பிடித்தமானதொன்றாகிவிட்டது. எழுந்து காரை நோக்கி நடந்தாள் துளசி.

"மனிதர்கள் சில நேரம் நிறம் மாறலாம்

மனங்களும் அவர் குணங்களும் தடம் மாறலாம்

இலக்கணம் சிலநேரம் பிழையாகலாம்

எழுதிய அன்பு இலக்கியம் தவறாகலாம் ....."

காரை ஓட்டிக்கொண்டிருந்தவளின் கவனத்தை ஈர்த்தன காரில் ஒலித்துக்கொண்டிருந்த அந்தத் திரைப்படப் பாடல் வரிகள். "எவ்வளவு உண்மையான வார்த்தைகள்!" என எண்ணியபடி பெருமூச்செறிந்தாள். உண்மையாயிருப்பதனால்தானே அவனால் அவ்வாறு நடந்துகொள்ள முடிந்தது. ஆறாண்டு காதல், ஐந்தாண்டு தாம்பத்தியம் அனைத்தையும் அரை நொடியில் அடியோடு அழித்து அவளுக்கு உயிர்வலி கொடுத்த வார்த்தைகளை நினைக்கும்போது அவளுக்கு அழுகை வரவில்லை. மாறாக விரக்திச் சிரிப்பொன்றுதான் வெளிப்பட்டது. இப்போதெல்லாம் அவள் அழுவதேயில்லை. எல்லாக்கண்ணீரையும் அவள் அன்றே அழுது தீர்த்துவிட்டாள். அவள் அன்னை இறந்தபோது கூட சொல்லொணாத் துயரில் நெஞ்சு கனத்ததே தவிர வற்றிவிட்ட அவள் கண்களிலிருந்து நீர் வரவேயில்லை.

மயூரன் - துளசி, விஞ்ஞான பீடத்தின் அடுத்தடுத்த அணிகளைச் சேர்ந்த இருவரும் படிப்பு, விளையாட்டு, கலை நிகழ்வு என எந்தத்துறையையும் விட்டு வைப்பதில்லை. போட்டி போட்டுக்கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர். துளசி மீது தனக்கிருந்த பிரியத்தை மயூரன் தெரிவித்த போது முதலில் அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. படிப்பு முடிந்ததும் பார்க்கலாம் என்று கூறிவிட்டாள். ஆனால் மயூரனின் ஒவ்வொரு செயலும் துளசிக்கு பள்ளிப்பருவத்தில் அவளை விட்டுப்பிரிந்த அருமைத் தந்தையை நினைவுபடுத்தியது. தோற்றத்தில் கூட அவன் தனது தந்தையின் சாயலைக்கொண்டிருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

துளசி கூறியதைப்போலவே அவள் பட்டம்பெற்று வேலையாகும்வரை காத்திருந்த மயூரன், தனது தாயுடன் துளசி வீட்டுக்குச் சென்று பெண் கேட்டான். துளசியும் தனது விருப்பத்தை தாயிடம் கூறவே அனைவரது ஆசீர்வாதத்துடனும் இனிதே நடந்தேறியது மயூரன் - துளசி திருமணம். ஒருவருக்காக ஒருவர் படைக்கப்பட்டவர் போல, ஆதர்சத் தம்பதியாராக தித்தித்தது இல்லறம். ஆனால் அதன் ஆயுட்காலம் ஐந்தாண்டுகள்தான் என அறிந்திருக்கவில்லை யாரும்.

அன்று மயூரனின் இளைய தங்கையின் திருமணம். திருமணப்பேச்சு தொடங்கிய நாளிலிருந்தே முழு வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தாள் துளசி. சிறு வயதில் தந்தையை இழந்த காரணத்தினால் மூத்தவனான மயூரனே அந்த வீட்டின் முழுப்பொறுப்பையும் ஏற்றிருந்தான். துளசியும் மயூரனின் தங்கையை ஒரு தாயைப் போன்ற நேசத்துடனேயே கவனித்துக்கொண்டாள். அவளுக்கு வேண்டியதையெல்லாம் அவள் கேட்காமலேயே பார்த்துப் பார்த்துச் செய்தாள்.

"ஏனடி உங்கட பெரிய அண்ணியைத்தானே உனக்குப் பிடிக்கும் ..... யுனில படிக்கேக்க பெரியண்ணி அது வாங்கித் தந்தவ இது வாங்கித் தந்தவ எண்டு காட்டிப் பெருமையடிப்பாய் .... அப்ப ஏனடி இண்டைக்கு உனக்குத் தோழியாக

காலுக்குக் கீழே நிலம் நகர்வது போலிருந்தது துளசிக்கு. கண்களில் நீர் முட்டியது. இந்த ஐந்தாண்டுகளில் அவள் கேட்ட குத்தல் கதைகளோ, நக்கல் பேச்சுக்களோ, பட்ட அவமானங்களோ கொஞ்சநஞ்ச மில்லை. ஆனால் அவையெல்லாம் வேற்று மனுசர்களால்தான். இன்றோ இது என்குடும்பம் இவர்கள் என்னவர்கள் என அவள் எண்ணியிருந்தவர்கள் இவ்வாறு முதுகுக்குப் பின் தன்னை பரிசசிப்பதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.



உங்கட சின்னண்ணி நிக்கிறா?" மணப்பெண் அறைக்கு ஏதோ அலுவலாக வந்த துளசி உள்ளே நடக்கும் சம்பாஷணை காதில் விழவே அறையினுள் பிரவேசிக்காது கதவருகே நின்றுவிட்டாள். "அதில்லையடி... கல்யாணஞ் செய்து அஞ்சு வருஷமாகியும் பெரியண்ணி இன்னும் குழந்தை பெறேலயாம். அதுதான் அவ வேணாம் சின்னண்ணி நிக்கட்டும் எண்டு அம்மாவும் அக்காவும் சொன்னவையள்" தோழிகள் கேட்டதற்கு பதிலளித்துக்கொண்டிருந்தாள் மணப்பெண். கதவுடன் அப்படியே திரும்பிவிட்டாள் துளசி. "அதனாலதான் அப்பா, அம்மாவா நிண்டு தாரை வார்த்துக் குடுக்கிறதுக்கும் சித்தப்பா, சித்தி நிக்கினம்" நடந்து சென்றுகொண்டிருந்தவள் காதிலே தேய்ந்து விழுந்தது உள்ளே நடைபெறும் உரையாடல். காலுக்குக் கீழே நிலம் நகர்வது போலிருந்தது துளசிக்கு. கண்களில் நீர் முட்டியது. இந்த ஐந்தாண்டுகளில் அவள் கேட்ட குத்தல் கதைகளோ, நக்கல் பேச்சுகளோ, பட்ட அவமானங்களோ கொஞ்சநஞ்சமில்லை. ஆனால் அவையெல்லாம் வேற்று மனுசர்களால்தான். இன்றோ இது என்குடும்பம் இவர்கள் என்னவர்கள் என அவள் எண்ணியிருந்தவர்கள் இவ்வாறு முதுகுக்குப் பின் தன்னை பரிகசிப்பதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மண்டபத்தூண் ஒன்றிற் சாய்ந்தவாறு பொங்கிவரும் கண்ணீரை அடக்கப் படாதபாடுபட்டுக்கொண்டிருந்தாள். கண்கள் கணவனைத் தேடின. அவனோ எதைப் பற்றியும் சிந்திக்க நேரமில்லாதவனாக ஓடித்திரிந்துகொண்டிருந்தான்.

அழுகைச் சத்தம் கேட்டு திடுக்கிட்டு கண்விழித்த துளசி சத்தம் வரும் இடத்தை நோக்கி ஓடினாள். அங்கே மயூரனின் பெரியதங்கையின் ஆறு வயது மகன் கீழ்த்தாடை அடிபட்டு இரத்தம் வழிய நின்றபடி அழுதுகொண்டிருந்தான். சுற்றி நின்றவர்கள் அவனைத் தேற்றிக்கொண்டிருந்தனர். விரைந்து அவனருகே சென்ற துளசி வழியும் இரத்தத்தை துடைக்க முயன்றாள். சட்டென்று அவள் கையைத் தட்டிவிட்டாள் மயூரனின் தங்கை. "உங்களிட்ட பிள்ளையை ஒருக்கா பார்த்துக் கொள்ளுங்கோ எண்டு சொல்லிற்றுத் தானே போனனான். அதுக்குள்ள இப்படிச் செய்து போட்டீங்களே" என்று கத்தினாள். துளசிக்கு ஒன்றுமே புரியவில்லை. "சரி முதல்ல பிள்ளையை ஹொஸ்பிற்றலுக்கு கூட்டிற்றுப்போவம்.... பிறகு மற்றதை கதைப்பம்" என்று கூறியபடி சிறுவனருகில் சென்றாள். "என்ர பிள்ளையைத் தொடவேணாம்....ஹொஸ்பிற்றலுக்கு கூட்டிற்றுப்போக எங்களுக்குத் தெரியும்... பெத்திருந்தால்தானே தெரியும் பிள்ளையின்ர அருமை" அவள் நாக்கு நெருப்பைக் கக்கியது. பொங்கி வந்த கண்ணீர் கண்களை மறைக்க, மயூரனைப் பார்த்தாள் துளசி. அவனோ தங்கை

வதை கண்டுகொள்ளவேயில்லை. தளர்ந்த
-யுடன் கூட்டத்தை விட்டு வெளியே வந்தாள்.
மணக்கொண்டாட்டம் முடிந்து மண்டபத்தின் ஓர்
ாக உட்கார்ந்திருந்தவளிடம்
ளயாடிக்கொண்டிருக்கும் தனது மகனைப்
த்துக்கொள்ளுமாறு மயூரனின் தங்கை
ச்சென்றதென்னவோ உண்மைதான். ஆனால்
ளது கணவன் , மகன் விளையாடுமிடத்தில்
நமர்ந்ததைக் கண்டபின்னரேயே அவள் அச்சிறுவ
க் கவனிக்காதுவிட்டாள். அப்படியே கண்ணயர்ந்
போனாள்.

✦✦✦✦✦

ண்டு கிடந்த அறையினுள் மின்விளக்கைப்
ட்டான் மயூரன். வெளிச்சம் கண்களைக் கூசச்செய்
ப கட்டிலிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள் துளசி.
தழுது முகமெல்லாம் வீங்கியிருந்தது.
கடைத்தது. இவள் பக்கமே திரும்பாமல், தான்
ரிந்திருந்த பட்டு வேட்டி சட்டையை மாற்றிவிட்டு
யலறை நோக்கிச் சென்றவனை "மயூரன்.." என
ழைத்தாள் துளசி. திரும்பிப்பார்க்காது நின்று
ன?" என்றான் அவன். "கொஞ்சம் கதைக்கோ
ணும் .. இதில் இருங்கோவன்" என்றவள் பக்கம் திரும்பி "இருக்க எல்லாம் ஏலாது ... என்ன விசயம் எண்டு சொல்லு" என்றான். அன்று காலையிலிருந்து அவள்பட்ட வேதனைகளுக்கும் மேலாக இருந்தது அவன் நடந்துகொள்ளும் விதம். "இண்டைக்கு உங்கட தங்கச்சி கதைச்சதுக்கு நீங்க ஒண்டுமே சொல்லேல ...அவ என்னை அப்பிடிப் பேசினது உங்களுக்கு கொஞ்சம் கூட கவலையாக இல்லையா?" என்றாள். "நான் எதுக்கு கவலைப்பட வேணும்? அதுதான் நல்ல நாளும் அதுவுமாய் அபசகுனம் மாதிரி இரத்தக்காயம், அழுகுரல் எண்டு எல்லாம் நடத்திப்போட்டியே ... பிறகென்ன .." என்றான். தன்தரப்பு நியாயத்தைக் கேட்காமல் ஒரு தலைப்பட்சமாக அவன் பேசுவதைக்கேட்க நெஞ்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வள்
# ாள்

கனத்தது துளசிக்கு. "அப்பிடி என்னிலேயே பிழையா இருந்தால் கூட அந்த மாதிரிப் பேசலாமா? .... அது சரியா?" என்றாள் நாத்தழுதழுக்க. "ஏன் அப்பிடி பிழையா என்னத்தை கேட்டுப் போட்டாள்? உண்மையைத்தானே சொன்னவள்?" என்றான் ஈவு இரக்கமில்லாதவனாக. துடித்துப்போன துளசி "ஏனப்பா? டொக்ரர் சொன்னவர் தானே ரெண்டு பேரிலேயும் ஒரு பிரச்சினையும் இல்லையெண்டும்... கொஞ்சம் வெயிட்பண்ணிப் பார்க்கலாம் எண்டும் ....." அவள் கூறி முடிக்கும் முன்னரே "அது சரி.. கொஞ்சம் வெயிட் பண்ணி.. வெயிட் பண்ணி அஞ்சு வருஷமாப் போச்சு ... இன்னும் எவ்வளவு காலம் வெயிட் பண்ண வேணும்?" என்றான் எரிச்சலுடன். "நான் எங்கட அப்பா அம்மாக்கு கல்யாணமாகி பத்து வருஷம் கழிச்சுத் தான் பிறந்தேனாம்" என்றாள் துளசி அப்பாவியாக. "அது சரி.. நல்ல கதை ... எனக்கு என்ன வில்லங்கமே....நான் ஒரு வருசத்துக்குள்ளயே பிறந்திட்டன். அதுமட்டுமில்லாம அடுத்தடுத்து எனக்கு மூண்டு சகோதரங்கள். உன்னை மாதிரியில்லை" வார்த்தைகளை விஷமாகக் கொட்டினான் மயூரன். துளசியால் பதில் பேச முடியவில்லை. குலுங்கிக் குலுங்கி அழத்தொடங்கினாள். அதைச் சற்றும் பொருட்ப டுத்தாதவனாக அவனே தொடர்ந்தான். "இண்டைக்கு பார்த்தனியா.. அந்தச் சபையிலே நான் எப்பிடி கூனிகுறுகிப்போய் நிண்டன் எண்டு? இங்க மட்டுமில்லை எல்லா இடமும் இப்படித்தான் நிக்கிறன்...பெடியள் எல்லாம் என்னைக் கேவலமா கதைக்கிறாங்கள் ... உன்னால நான் கொஞ்சநஞ்ச அவமானமே படுகிறன்" என்றவனை இடைமறித்து "ஏன் அவமானம், வேதனை உங்களுக்கு மட்டும்தானா? எனக்கில்லையா? நான் அது ஒண்டையும் அனுபவிக்கவே இல்லையா?" என்று கேட்டாள்.

"அது உன்ர பிரச்சினை..உன்ர தலையெழுத்து ... எனக்கென்ன? நான் ஆம்பிள.. இப்ப இன்னொருத்தியக் கட்டினாலும் பத்து பிள்ளை பெத்துக்காட்டுவன்" படபட வென்று பேசிவிட்டு அறையைவிட்டு வெளியேறினான் மயூரன். கடைசியாக அவள் காதில் விழுந்த அந்த வார்த்தைகள் ... அந்த நொடியே, தான் இறந்துவிடக் கூடாதா என்று நினைத்தாள் துளசி.

மேசைமீது வைத்திருந்த தந்தையின் படத்தைக் கையிலெ டுத்தாள். "அப்பா ... அப்பா..." படத்தை நெஞ்சோடு கட்டிக்கொண்டு கத்தினாள். "இது நான் வாங்கிக்கொண்டு வந்த வரமா.. அப்பா? ... நான் என்ன பிழை செய்தே னப்பா? ஏன் எல்லாரும் என்னை ஓட ஓட விரட்டுறாங்கள்? எனக்குத் தெரியேல அப்பா... என்னால இந்த ஏச்சுக்க ளைத் தாங்க முடியேல அப்பா....நான் என்ன பிழை செய்தன் எண்டு தெரியாமலே எல்லாராலையும் தண்டிக்கப் படுகிறனப்பா .....அப்பா .... என்னை உங்களிட்ட எடுத்தி டுங்கோ ... எனக்கு இந்த பாவப்பட்ட வாழ்க்கை போதும் ... என்னை உயிரோட எரிக்கிறாங்களப்பா .... எனக்கு வலிக்குதப்பா.... என்னால தாங்கமுடியேல ... எனக்காக பத்து வருஷம் காத்திருந்தீங்களே அப்பா .... நீங்கள் என்ர அம்மாவை ஏன் வெறுக்கேல? நீங்களும் ஒரு ஆம்பிளைதானே அப்பா? பெத்தால்தான் தெரியுமாமே பிள்ளை அருமை? நித்தம் நித்தம் நொடிக்கு நொடி ஏன் கனவில கூட ஒரு பிஞ்சு ஸ்பரிசத்துக்காக ஏங்கிற என்னை மாதிரியானவர்களை விடவா குழந்தை பெற்ற ஒருத்திக்குத் தெரியப்போகிறது பிள்ளை அருமை .... ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் திகதி நெருங்க நெருங்க மனம் அல்லல் படுற வலியைவிடவா ஒரு குழந்தையை பெற்றெடுக்கும் பிரசவ வலி இருந்துவிடப்போகிறது அப்பா? அப்பா.... அப்பா...." அழுதாள் .... அரற்றினாள்... துடித்தாள் .... துவண்டாள் ....

✦✦✦✦✦

நினைவுகள் தந்த வெம்மையினால் நா வறண்டது துளசிக்கு. காரில் தண்ணீர் போத்தல் வெறுமையாக இருந்தது. காரை ஓரமாக நிறுத்திவிட்டு வீதியின் எதிர்ப்புற மிருந்த கடையை நோக்கிச் சென்றவள், திரும்புகையில் கண்ணில்பட்டது அந்தக்காட்சி.... சற்றுத் தள்ளி நின்றிருந்த அந்த ஆலவிருட்சத்தின் கீழே ஒரு சிறு குடிலுடன் இணைந்தவாறு போடப்பட்டிருந்தது தடிகளால் பிணைக்கப்பட்ட அந்த மேசை போன்ற அமைப்பு. அதன்மேல் பனங்கிழங்கு, சோளம், மாங்காய், நெல்லிக் காய் போன்ற பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டி ருந்தன. அருகில் எரிந்தபடியிருந்த அடுப்பில் சோளம் அவிந்துகொண்டிருந்தது. விறகுகளைத் தட்டி தட்டி அடுப்பினுள்ளே தள்ளியபடி ஊதுகுழல் ஒன்றினால் தணலை ஊதிக்கொண்டிருந்தாள் அந்த வயோதிபப் பெண். துளசிக்கு அவளை எங்கோ பார்த்தது போலவும் பரிச்சயமானவள் போலவும் தோன்றியது.

"அம்மா பனங்கிழங்கு என்ன விலை?" துளசி கேட்கவும் தரையில் கைகளை ஊன்றி சிரமப்பட்டு எழுந்து அவளை நோக்கி வந்தாள் அந்தப்பெண். துளசியின் முகம் பிரகாசித்தது. "பூரணம் அம்மா" மகிழ்ச்சியில் சற்று உரக்கவே கத்திவிட்டாள்.

"ஆரது? ...." வலது கையை கண்களுக்கு மேலே நெற் றிக்கு குறுக்காக பிடித்தபடி கண்களைச் சுருக்கிக்கொண்டு துளசியைப் பார்த்த அவளும் கண்கள் விரிய "அட துளசியம்மா" என்றவாறு துளசியின் இரு கைகளையும் பிடித்து மாறிமாறி முத்தமிட்டாள். கன்னத்தை வருடினாள் "ராசாத்தி .... எப்பிடியம்மா இருக்கிறாய்? முதல்ல இரம்மா ....." என்று கூறியபடி அந்த வாசலில் கிடந்த வெளிறிப் போன பிளாஸ்ரிக் கதிரையை இழுத்துப் போட்டாள். "எனக்கு சந்தோசத்தில கையும் ஓடேல காலும் ஓடேல "என்றாள் ரேகைகள் படர்ந்த கன்னங்கள் குழியச் சிரித்தவாறு.

பூரணம் அம்மா... துளசிக்கு விபரம் தெரிந்த காலத்திற்கு முன்பிருந்தே அவர்களது வீட்டில் வேலை செய்து வந்த வள். மிகுந்த நேர்மையும் வேலையில் நேர்த்தியும் மிக்கவள். துளசியின் தாய் தந்தையின் நம்பிக்கைக்கும் பாத்திரமானவள். அவளுக்கு ஒரே ஒரு மகள். அந்தப் பெண்ணின் திருமணத்திற்கு தான் சிறுமியாக இருந்த போது தாய் தந்தையுடன் சென்றுவந்தது கூட துளசிக்கு நல்ல ஞாபகம்.

"கடைசியா ஐயாவின்ர மரணச்சடங்குக்கும் அந்தியேட்டிக் கும் வந்தனான்.... ஒரு பதின்மூண்டு பதின்னாலு வருசம் இருக்குமே ராசாத்தி?" என்ற பூரணம் "அம்மா எப்பிடி இருக்கிறா? நீங்கள் எப்பிடி இருக்கிறீங்கள்" எனத் தொடர்ந் தாள். தனது வாழ்க்கை பற்றியும் விவாகரத்தானதன் பின் தான் தாயுடன் வசித்து வந்ததையும் தன்னைப் பற்றிய கவலையிலேயே தாய் இறந்து போனதையும் சுருக்கமாக கூறி முடித்த துளசி, "அது சரி நீங்கள் எங்க திடீரெண்டு காணாமல் போனீர்கள்? அம்மா படுத்த படுக்கையா இருக்கேக்க உங்களைத் தேடி உங்கட வீட்ட போனனான். நீங்க அங்க இல்லை எண்டும் எங்க போனீங்கள் எண்டு தெரியாது எண்டும் பக்கத்தில இருந்த ஆக்கள் சொன்ன வையள். இஞ்ச எப்பிடி வந்தனீங்கள்? "கேள்வி மேல் கேள்விகளை அடுக்கியபடி பூரணம் அம்மாவைப் பார்த் தாள். பதில் கூற முற்பட்ட பூரணம் உள்ளே குழந்தையின் அழுகுரல் கேட்கவே சற்றுப் பொறுக்குமாறு கையைக் காட்டிவிட்டு குனிந்து குடிசையினுள் சென்றாள்.

துளசியின் தந்தை இறப்பதற்கு சுமார் இரண்டாண்டுக ளுக்கு முன் ஒரு நாள் பூரணம் அம்மா தன்னுடன் தனது ஐந்து வயது பேர்த்தியையும் துளசியின் வீட்டுக்கு அழைத்து வந்திருந்தாள். பூரணத்தின் மகளும் மருமகனும் வன்னிப் பிரதேசத்திலேயே விவசாயம் மேற்கொண்டிருந்தனர். அங்கு ஏற்பட்ட போர் அனர்த்தத்தின்போது இருவரும் இறந்துவிடவே உறவினர் ஒருவரின் உதவியுடன் பேர்த் தியை தன்னுடன் அழைப்பித்துக்கொண்டாள் அவள். குழந்தையுடனேயே தினமும் வேலைக்கு வந்துபோய்க் கொண்டிருந்தாள். "பொம்பிளப்பிள்ளையையும் கூட்டிக்கொண்டு நீங்கள் வீட்டுவேலைக்கு வந்து போறது கஷ்டம். பிள்ளையும் இனி பள்ளிக்கூடம் போக வேணும்" என்று கூறியதோடு மட்டும் நின்றுவிடாது பூரணத்திற்கு வீட்டுடன் கடை ஒன்றினை அமைத்துக்கொடுத்து குழந் தையை ஆரம்பப்பள்ளியில் சேர்த்தும் விட்டார் துளசியின் தந்தை. சிந்தனைவயப்பட்டிருந்த துளசி எழுந்து சென்று குடிசைக்குள் புகுந்தாள். மடியிலே குழந்தையை வைத்து ஆட்டியபடி பால் கலக்காத வெறும் தேநீரை பால்புட்டியி னுள் விட்டு குழந்தைக்கு புகட்டிக்கொண்டிருந்தாள் பூரணம். குழந்தையும் அண்ணாந்தபடி கை கால்களை ஆட்டியவாறு ஆசையுடன் அந்த வெறும் தேநீரை உறிஞ் சிக்கொண்டிருந்தது. துளசிக்கு ஒன்றுமே புரியவில்லை. குழப்பத்துடன் பூரணம் அம்மாவைப் பார்த்தாள். கிழவி ஒற்றைக் கையினால் தலையிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழத்தொடங்கினாள்.


"ஐயா பள்ளிக்கூடம் சேர்த்துவிட்ட என்ர பேத்திய ஞாபகம் இருக்குதா அம்மா?" என்று கேட்ட பூரணத்தைப் பார்த்து "ஓம்" என்றவாறு துளசி தலையசைக்கவே அவள் தொடர்ந் தாள். "பிள்ளை ரவுனுக்க ஒரு உடுப்புக் கடைக்கு வேலைக் குப்போய் வந்தவளம்மா .... பஸ்ஸில போக வர ஒரு பெடியனோட சிநேகிதமாகிவிட்டாள். அவன் கல்யாணம் செய்யிறன் எண்டு சொல்லி பிள்ளய ஏமாத்திப்போட்டான். பிள்ள மாசமாயிற்றுது. ஊருக்க இருக்க வெக்கத்தில அந்த வீட்டையும் கடையையும் அம்பிட்ட விலைக்கு குடுத்திட்டு இஞ்ச வந்திட்டம். பிள்ளையையும் கூட்டிக்கொண்டு திரியாய் திரிஞ்சன். எந்தப் பயனுமில்ல. கேட்க நாதியில்ல. கையில காசில்ல. அவனோட போராட எங்களுக்கு முடியேல. இந்தப் பிள்ள பிறந்தாப்பிறகு இதின்ர முகத்த பார்த்தாவது அவன் மனம் இரங்குவான் எண்டு பிள்ளை யையும் கொண்டு போய்க் காட்டினம். அவன் கணக்கெடுக் கேல. ஆனா அவன் எப்பாவது தன்னை கல்யாணம் செய்வான் எண்டு என்ர பேத்தி நம்பியிருந்தவளம்மா. .... போன மாசத்துக்கு முதல் மாசம் அவன் வேற ஒரு பெட் டையை கல்யாணம் செய்திட்டான் எண்டு சிநேகிதப் பிள்ளையள் சொல்லி அறிஞ்சிட்டாள். தின்னாம குடிக்காம அழுதுகொண்டே கிடந்தவளம்மா. இந்த பால்குடிய, பச்ச மண்ண விட்டிட்டு போனமாசம் பூச்சி மருந்து குடிச்சு செத்துப்போயிற்றாளம்மா. பொடி எடுக்கக்கூட காசில்லாம ஆஸ்பத்திரில இருந்து அப்பிடியே அரசாங்கச் சிலவில அடக்கம் பண்ணியாச்சு" பூரணம் குமுறிக் குமுறி அழுதாள்.

"துளசி .... தற்கொலை செய்யிறது கோழைத்தனம் என்று சொல்றாங்கம்மா. அது தப்பு. தற்கொலை செய்யிறதுக்கு ஒரு அசாத்திய துணிச்சல் வேணும். அந்தத் துணிச்சலில ஒரு கொஞ்சத்தையாவது வாழ்க்கையில காட்டி எதிர்நீச்சல் போட்டால் வாழ்க்கை வெற்றிதானம்மா."
முன்னொருபோது தன் தந்தை கூறியதை நினைவில் கொண்டாள் துளசி. அன்று அவர் கூறிய அந்த வார்த்தை கள்தான் துளசியை இன்றும் தன்னம்பிக்கையுடன் வாழவைத்திருக்கின்றது. "பாவம் இந்தப் பேதைப் பெண் ணுக்கும் இதைக்கூற யாரேனும் இருந்திருந்தால் அநியாய மாக ஒரு உயிர் பறிபோயிருக்காது" என தனக்குள் எண்ணிக்கொண்டாள். "ய்யீய் ...ங்கா...." வெறும் தேயிலைச்சாயத்தினால் பசியடங்கவில்லை போலும். வீறிட்டது குழந்தை. துளசி தன்னையுமறியாமல் ஓடிச் சென்று பூரணம் மடியில் கிடந்த குழந்தையை அள்ளியெ டுத்தாள். உச்சிமோந்தாள். அதன் நெற்றி, கன்னங்கள் என மாறிமாறி முத்தமழை பொழிந்தாள். அவள் கைகள் நடுங்கின. "ங்காங்கா...." அழுகையை நிறுத்திய குழந்தை தனது பிஞ்சு விரல்களால் அவளது கன்னங்களைத் தடவியது. துளசிக்கு உடல் சிலிர்த்தது. புல்லரித்தது. குழந்தையை மார்போடு இறுக்கி அணைத்துக்கொண்டாள். துளசி அழுதாள். தேம்பித் தேம்பி அழுதாள். கன்னங்களில் வழிந்த நீர் நாவில்பட்டது. அந்தக் கண்ணீர் உப்புக்கரிக்க வில்லை. அவள் அழுதுகொண்டேயிருந்தாள். அவள் மார்புகளில் சுரக்க மறந்த தாயமுதம் அவள் விழி வழியே பெருக்கெடுத்துக்கொண்டிருந்தது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அசுரன்: புராணகாலப் பிரதியில் சமகால அரசியல்



*(சென்றவாரத் தொடர்ச்சி)*

○ நா.நவராஜ்

'துவக்கத்தில், அசுரர்கள் மிகச் சிறப்பான போர்முறை உத்திகளைக் கொண்டிருந்தனர். அத்தோடு, போர்க் கருவிகளை உருவாக்கத் தேவையான சிறந்த பொறியியலாளர்களும், போரை வல்லமையுடன் முன்னின்று வழிநடத்திச் செல்லக் கூடிய மாபெரும் இராணுவத் தளபதிகளும் அரசர்களும் அவர்கள் வசம் இருந்தனர். ஆனால் தேவர்களின் சூழ்ச்சியும், தங்களது சொந்த மக்களின் நம்பிக்கைத் துரோகமும் அசுரர்கள் தோல்வியுறுவதை உறுதி செய்தன. அசுரர்களிடம் ஒற்றுமை இருக்கவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. தாங்கள் மற்றவர்களை விட மேன்மையானவர்கள் என்ற அசுரர்களின் உணர்வு, அவர்களது பொய்யான பெருமிதம், தங்களது சக்திகளின் மீது அளவுக்கதிகமான தன்னம்பிக்கை, எல்லாவற்றையும் விட மேலாக, தேவர்கள் நியாயமாகப் போரிடுவார்கள் என்ற அவர்களது எதிர்ப்பார்ப்பு. தாங்கள் நியாயமாகப் போரிடுவதாக தேவர்கள் எப்போதுமே சொல்லிவந்தாலும், அவர்கள் அதை அரிதாகவே கடைப்பிடித்தனர்.' என்ற இராவணனின் கூற்றையும் 'திரிகோட்டா (இராவணனது ராச்சியம்) விரிவடைந்து வளர்ந்தபோது. நான் என்மனைவியுடன் ஒரு குடிசையில் குடியேறி விவசாயம் செய்யத் துவங்கினேன். ஆனால் அவற்றுக்கான விதைகள் என்னிடம் இருக்கவில்லை. எனவே உள்ளூரில் வட்டிக்குக் கடன் கொடுத்த ஒருவனிடம் ஒரு சிறு தொகையைக் கடன் வாங்கினேன். பிறகு, பணக்காரர்களாக ஆவது குறித்த எங்கள் கனவுகளை நாங்கள் முடையத் தொடங்கினோம். சில நாட்களுக்குப் பிறகு அந்தக் கனவுகள் சௌகரியமாக வாழ்வது குறித்த கனவுகளாக நீர்த்துப் போயின. பின்னாளில், செலவுகளைச் சமாளிப்பது குறித்து மட்டுமே நாங்கள் கனவு கண்டோம். அதன் பிறகு, ஒரு நாளைக்கு ஒரு வேளையாவது உணவு கிடைக்க வேண்டும் என்பது மட்டுமே எங்கள் கனவாக ஆகிப்போனது. கடனிலிருந்து எப்படியாவது விடுபட வேண்டும் என்று நாங்கள் கனவு கண்டோம். இறுதியில் கனவு காண்பதையே ஒட்டு மொத்தமாக நாங்கள் கைவிட்டோம். மேற்தட்டு மக்கள் செழிப்படைந்தனர். அதனால் நாடும் செழிப்படைந்தது. பெரும்பான்மையான மக்கள் வாழ்க்கை நடத்தப் போராடியது குறித்தோ, அல்லது அதிக வட்டிக்குக் கடன் கொடுத்த ஈட்டிக்காரர்களிடமிருந்து தப்பிப்பதற்காக விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டது பற்றியோ யாரும் கவலைப்படவில்லை. நாங்கள் கண்ணுக்குப் புலப்படாத மக்களாக இருந்ததால், யாரும் எங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. உலகில் மிக வேகமாக வளர்ந்து வந்த நாடுகளில் எனது நாடும் ஒன்றாக இருந்தது என்பதை நினைத்து நான் என்னைச் சமாதானப்படுத்திக் கொண்டேன். அது என்னுடைய வயிற்றை நிரப்பவில்லை. ஆனால் மார்தட்டிக்கொள்வதற்கும் என்னுடைய அகங்காரத்திற்குத் தீனி போடுவதற்கும் அது உதவியது. என்னைப் போன்ற பல நண்பர்கள் எனக்கு இருந்தனர். உள்ளூரில் இருந்த அலங்கோலமான மதுவிடுதிகளில் நாங்கள் ஒவ்வொரு நாளும் குடித்தோம். எங்களுடைய அரசனின் செழிப்பையும் அசுரசாம்ராஜ்யத்தின் செழிப்பையும் நாங்கள் கொண்டாடினோம்.' என்ற பத்ரனின் கூற்றையும் மனத்திற்குள் எடுக்காமல் தாண்டிச் செல்லமுடியவில்லை. நாவலில் இப்படியான பல உரையாடல்கள் எம்மைத் தமக்குள் இழுத்து மூழ்கடித்து விடுகின்றன.

'அசுரன்;' நாவலின் சீதை , இராவணனுக்கும் மண்டோதரிக்கும் பிறந்தவளாகச் சித்திரிக்கப்படுகின்றாள். இது ஜைன ராமாயணத்தை ஒட்டி எழுந்த கருத்தாகும். குறிப்பாக ஸ்ரீ விமலசூரியர் என்பவர் எழுதிய 'பௌமாசரிய' என்று ப்ராக்கிருத மொழியில் (சமஸ்கிருதத்தில் பத்ம சரிதம்) அழைக்கப்படும் ஜைன இராமாயணத்தில் இவ்விடயம் குறிப்பிடப்படுகின்றது.

இந்த இராமாயணம் ஆதிகவியான வால்மீகியின் கதையில் இருந்து மாறுபட்டு எழுதப்பட்டுள்ளதோடு (ஜைன ராமாயணங்கள் சில வால்மீகியின் கதையை ஒட்டி எழுதப்பட்டு இருப்பதாகவும் அறியமுடிகின்றது.) இராவணனது வம்சவர்ணனையுடனேயே தொடங்குவதாகவும் கும்பகர்ணன் ஆறுமாதம் தூங்குகிறான் என்பதையும் அவனைப் போர்க்காலப் பேரிகைகள் முழங்கியும் எழுப்பமுடியவில்லை என்பதையும் எப்படி ஏற்பது? இராவணனுக்குப் பத்துத் தலைகள் இருந்தன என்பதை எப்படி ஏற்பது? இந்திரனை வென்ற ராவணனை குரங்குகள் படை எப்படி வென்றது? போன்ற கேள்விகளை ச்ரேணிகன் என்ற மன்னன் எழுப்ப, அந்தக்கேள்விகளுக்கு உண்மை இராமாயணத்தை நான் சொல்லுகின்றேன் என்று கௌதம முனிவர் சொல்வதாகவும் கூறியே அதனைத் தொடங்குகின்றார் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த இராமாயணக் கதையில் எழுப்பப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு (விமலசூரியர் தன்னளவில் பதில்களைச் சொல்கின்றார். இராவணனின் பத்துத்தலைக்குக்காரணம் அவன் அணிந்த நவரத்தின மாலை. அதில் அவன் தலை பத்தாகத் தெரிந்தமையால் தசக்கிரீவன் ஆனான் என்கின்றார்.) இன்றைய சமகாலச் சிந்தனை வழிநின்று பதில் சொல்லும் செயற்பாட்டின் மூலம் வீழ்த்தப்பட்டவர்களின் வரலாற்றைப் புனையும் ஒரு முயற்சியையே அசுரனில் ஆனந்த் நீலகண்டன் மேற்கொண்டுள்ளார் போல எனக்குத் தோன்றுகின்றது.

சீதை பிறந்ததும் ஜோதிடர்கள் இவளால் அசுரகுலத்திற்கு அழிவு வரும் எனக் கூறுகின்றனர். எனவே அவளைக் கொல்வதற்குப் பலர் விரும்புகின்றனர். இராவணனுக்கு அது விருப்பமில்லை. பின்னர் இராவணன் கார்த்தவீரியர்ச்சுனனிடம் சிறைப்பட்டதும் அந்தக்குழந்தையைப் பத்ரன் மூலம் கொல்ல அவர்கள் முயல்கின்றனர்.

பத்ரன் அவளைக் கொல்ல மனமில்லாமல் காட்டுக்குக் கொண்டு சென்று களைப்பால் நித்திரையில் இருக்கும் போது ஜனகர் தனது பரிவாரங்களோடு வேட்டைக்கு வந்து காட்டில் முகாமிடும் சத்தம் கேட்டு விழித்தெழுந்து மறைவிடம் தேடப் பிள்ளை தவறிப் புதைமணலில் விழுந்து அழுகின்றது. ஜனகரின் சேவர்கள் வருகின்றனர். ஜனகர் வருகின்றார் ஏரினால் புதைமணலில் தோண்டிப் பிள்ளையை எடுக்கின்றார். அவர் மகளாகச் சீதை வளர்கின்றாள்.

*(அடுத்தவாரம் தொடரும்)*

# குற்றச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டோருக்கான சட்டம் பற்றிய ஒரு பார்வை

○ சட்டத்தரணி தி.திருச்செந்தில்நாதன்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இந்தச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க குற்றச் செயலினால் பாதிக்கப்படுவோர் என்று பின்வருவோரை உள்ளடக்கும்.

விசாரணை ஆணைக்குழுக்கள் என்ற வகுதியினுள் அடங்கும் வகையான ஆணைக் குழுக்கள் வருமாறு:

1978 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நியமிக்கப் படும் ஆணைக்குழுக்கள் ,1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட ஊழலையும், லஞ்சத்தையும் விசாரிப்பதற்கான ஆணைக்குழு, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மனிதஉரிமை ஆணைக்குழு என்பன அடங்கும்.

**குற்றச்செயலில் பாதிக்கப்பட்டோர் சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கங்கள்**

1. குறித்த வகையானோரின் உரிமைகளையும், உரித்துகளையும் விதந்துரைத்தலும் அவற்றின் முன்னேற்றம், பாதுகாப்பு அமுலாக்கல் என்பவற்றை அனுபவிக்க வழி செய்தலும், ஏற்பாடு செய்தலும்.

2. குறித்த வகையிலானோருக்கு உதவிகளையும், பாதுகாப்பையும் அளித்தல்.

3. மீளமைத்தல் (restitution) நட்டஈடு, மீளக்கொண்டு வரல் (reparation) புனர்வாழ்வு அளித்தல்.

4. குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களிடமிருந்து நட்டஈடு பெற்றுக்கொடுத்தல்.

5. குறித்தவகையோரின் பாதுகாப்பு முன்னேற்றம் சம்பந்தமாக பொதுச்சேவை, நீதிச்சேவை அதிகாரிகளின் பொறுப்புகளை உறுதிப்படுத்தல்.

6. குறித்த வகையினருக்கு எதிரான குற்றங்களையும் அதற்கான தண்டனைகளையும் வழங்க வழி செய்தல்..

7. சிறந்ததும், முறையானதுமான முறையில் குறித்த சட்டத்தினை அமுல்படுத்தல்.

அதாவது குறித்த வகையினரோரின் பாதுகாப்புக்கும் உதவிக்குமென சர்வதேச நியமங்களைப் பேணுதல், ஏனைய நாடுகளில் உள்ள சிறந்த பொறிமுறைகளைக் கடைக் கொள்ளலும் இதனுள் அடங்கும்.

குற்றச்செயலால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உள்ள உரிமைகள் சட்டத்தினால் உறுதி செய்யப்பட்டுள்ளன. அத்தகைய ஒருவர் தொடர்பில் அவர்களின் சமத்துவத்துக்கான உரிமை மற்றும் நியாயத்தன்மையை அவர்கள் கருத்திற்கொள்ள வேண்டும். சட்டத்திற்கு முன் யாவரும் சமன் என்கின்ற உரிமையானது சட்டத்தின் முழுப்பாதுகாப்பையும் வழங்குகின்றது. இது பாரபட்சமின்மைக்கு சாதகமான ஒரு பாதுகாப்பாகும். குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவருக்கு முன் விசாரணை கட்டத்தின் போதும், குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படும் போதும் நீதிமன்றினால் சிறப்பான கருத்திற்கெடுக்கப்படல் தொடர்பில் சமத்துவமான நியாயமான உரிமையை கொண்டவர்கள் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவரின் சமத்துவமான நியாயமான உரிமை, கௌரவம், அந்தரங்கம் (Pirvacy) என்பவற்றைப் பேணுவது தொடர்பில் நீதிமன்றின் பங்கு அளப்பரியது. தேவையற்ற வினாக்களைத் தொகுத்து இத்தகைய நபரைக் குறுக்கு விசாரணையின் போது கட்டுப்படுத்துவதும் நீதிமன்றின் பொறுப்பாகும்.

அத்துடன் நீதிமன்றினால் பாதிக்கப்பட்டவரின் பாரதூரத்தன்மையை கருத்திற்கெடுத்து நீதிமன்றில் தனித்து நிற்பதற்கான இடம், அத்தகைய ஒருவரின் விசாரணை தனிப்பட்ட முறையில் இரகசியமாக நீதவானால் மேற்கொள்ளப்படவேண்டுமா, சாட்சியம் தூர இடத்திலிருந்து வீடியோ மூலம் பெறப்பட வேண்டுமா, பத்திரிகையாளரினால் பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை வெளிவிடாமல் நெறிப்படுத்த வேண்டுமா என்பன நீதிமன்றின் முன் உள்ள பொறுப்பாகும்.

*(அடுத்தவாரம் தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட்ஸ் அப் வாத்தியும் பேஸ்புக் பேத்தியும்

> அப்ப இருந்த சிங்கப்பூர் பிரதமர் ஒருமுறை சொன்ன வராம் இலங்கையைப் போலை சிங்கப்பூரை ஆக்க வேணும் எண்டு. ஆனால் அது இப்ப தலை கீழா மாறிப்போச்சு

**பேத்தி :** குட் மோர்னிங் தாத்தா! பொங்கலண்டைக்கு அங்காலை போட்டுவாறன். இஞ்சாலை போட்டுவாறன் எண்டு சொல்லிப்போட்டு எங்கை போனனியள்?

**தாத்தா :** உவர் ஜனாதிபதி அநுரவைப் பாக்கத் தான் போனனான். சொன்னால் விடமாட்டியள்...அது தான்..!

**பேத்தி :** அங்கை போனனியள் சரி. அதைப் பற்றின உங்கடை கருத்தென்ன?

**தாத்தா :** எங்கடை தமிழ் அரசியல்வாதியள் தங்கடை இருக்கைகளைப் பாதுகாக்க, தங்கடை கட்சி அரசியலை விட்டிட்டு இன்னும் இறங்கி மக்கள் அரசியலைச் செய்யவேணும் எண்டதைப் புலப்படுத்திறதாத்தான் அந்தக் கூட்டத்தைப் பார்த்தனான். அதோடை தங்களை நேசிக்கிற ஒரு தலைவனைச் சனம் இன்னும் தேடிக் கொண்டிருக்கிறதைக் கண்டனான்.

இந்த அரசாலை எங்கடை முக்கியமான பிரச்சினைகளிலை இன்னும் கைவைக்கேலாமல் இருக்கு. இருந்தாலும் மக்கள் சரியான விருப்பத்தோடை ஆரவாரமா ஜனாதிபதி அநுராவை வரவேற்கினம் எண்டால் எங்கடை தலைமையிலை பிழை இருக்குது எண்டு தானே அர்த்தம்.

அநுர வாற நேரமெல்லாம் எங்கடை அரசியல்வாதியள் ஏன் பதற்றப்படுகினம்? தேவையில்லாமல் வெறுப் பேத்திறமாதிரிப் பழைய கதையளைப் பேசி,படம் காட்டித் தங்கடை இயலாமையை வெளிப்படுத்திறப் பாத்தால் அருவருப்பா இருக்கு.

**பேத்தி :** நீங்கள் உப்பிடித்தான். ஒரு பக்கமாக் கதைப்பியள். அநுர நல்லா நடிக்கிறார் எண்டு கதைக்கினம். அந்தாளுக்கு மேலை எவ்வளவு குற்றச்சாட்டு இருக்கு. வடக்கு- கிழக்கு மாகாணங்களை வடக்கு எண்டும் கிழக்கு எண்டும் பிரிச்சது அவர்தானே?

**தாத்தா :** ஆர் கதைக்கினம்? காழ்ப்புணர்வுள்ளவை தானே கதைக்கினம். அப்பிடிச் சொல்லி அவை தங்களைத் தாங்களே தேற்றுகினம் எண்டுதான் நான் சொல்லுவன். அவைக்குத் தெரியாது தாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மக்களாலை மறக்கப்படுகினம் எண்டு. எதிர்ப்பரசியலைச் செய்யவேண்டாம் எண்டு நான் சொல்லேல்லை. மக்களை உங்களோடை வைச்சுக் கொண்டு தேவைக்கு ஏற்றாப்போலை செய்யுங்கோ. தொட்டதுக்கெல்லாம் எதிர்ப்பைச் சொல்லிக் கொண்டு, உண்மை என்ன எண்டு தெரியாமல் எதிர்க்கிறதெண்டால்...... என்ன லாபம்? ஐ லவ் யூ பிரசிடெண்ட் எண்டு சனம் கத்திறதைப் பாத்துச் சனத்துக்கு விசர் எண்டு கதைக்காமல் சரியான நிலைமையைப் புரிஞ்சுகொள்ள வேணும். அநுரவின்ரை தனிப்பட்ட நெருக்கத்தை ஒரு தனிமனித ஈர்ப்பு எண்டு எண்ணாமல் அதை ஒரு அரசியல் மாற்றம் எண்டு பாத்தால் எங்கடை ஆக்கள் திருந்திவிடுவினம். சரி வேறை ஒண்டும் பேஸ்புக்கில இல்லையோ?

**பேத்தி :** ரோஹண விஜயவீரவும் பிரபாகரனும் இலங்கையில் பிறக்காமல் இருந்திருந்தால் இலங்கை எப்பவோ சிங்கப்பூரைப்போலை வந்திருக்கும் அவங்கள் பிறந்ததாலைதான் இவ்வளவு பின்னடைவு எண்டு ஒரு ராஜபக்ச சொன்னதுக்கு ஒரு சிங்களச் சகோதரர் ஒருத்தர் மறுத்தான் குடுத்திருக்கிறார்.

'உங்களைப்போன்ற அரசியல்வாதியள் பிறந்ததாலைதான் யுத்தங்கள் நடந்தது. நீங்கள் பிறக்காமல் இருந்திருந்தால் எல்லாரும் அமைதியாயிருந்திருப்பினம். எப்ப நீங்கள் உங்கடை சட்டைப்பையளை நிரப்ப வெளிக்கிட்டியளோ அப்ப இந்த நாடு பிச்சை எடுக்கத் துவங்கிவிட்டுது. சிங்கப்பூர் அரசியல்வாதியள் போலை நீங்கள் இருந்திருந்தால் இண்டைக்கு எங்கடை நாடு சிங்கப்பூரைவிடச் சிறப்பா இருந்திருக்கும்' எண்டு அந்தச் சிங்களச் சகோதரர் எழுதியிருக்கிறார்.

**தாத்தா :** உண்மைதான். அப்ப இருந்த சிங்கப்பூர் பிரதமர் ஒருமுறை சொன்னவராம் இலங்கையைப் போலை சிங்கப்பூரை ஆக்க வேணும் எண்டு. ஆனால் அது இப்ப தலை கீழா மாறிப்போச்சு. சரியடி பிள்ளை, தாத்தாவுக்கு கதைச்சுக் களைக்குது ஓடிப்போய் ஒரு ரீ போட்டுக்கொண்டு வா!

## ஊர்ப்புதினம்

### பாகம் 4

○ இராகவன்

போன கிழமை எங்கட சிவமண்ணை ஊர்ப்புதினத்தில அம்மா காலமானதை வாசிச்சிட்டு கோல் எடுத்துக் கதைச்சதைப் பற்றிச் சொல்லியிருந்தனான். அதில பெரிய சோகம் என்னவெண்டால் அவரின்ர தங்கைக்காரி அருந்ததியும் இளவயதிலேயே காலமாகிவிட்டா எண்டதுதான். இப்பிடி நிறையச் சோகக்கதைகள், சொந்தக் கதையள் இருக்கு. இதுகளையெல்லாம் கடந்து போறதுதானே வாழ்க்கை.

சரி ,இப்ப நாங்கள் விசயத்துக்கு வருவம். செல்வச்சந்நிதித் திருவிழா நேரங்களில அம்மம்மா பெரிய தோட்டத்திலயிருந்து தல்லையப்புலத்துக்குப் பொடிநடையில வந்து அம்மாவிட்டை 'எடி மோனை! நாளைக்குச் சந்நிதிக்கு ஒருக்காப்போய் வருவம் எண்டு பார்க்கிறன்' எண்டு ஒரு கதையைப் போடுவா. அவா என்ன சொல்ல வாறா எண்டது அம்மாக்குத் தான் விளங்கும். அப்பக்குள்ள அம்மா இராப் பகலாச் சட்டையைள் தைச்சு உழைச்ச காசெல்லாம் இலாச்சிக்குள்ள குவிஞ்சு போய்க் கிடக்கும்.

அப்படியே இலாச்சியைத் திறது எண்ணிப் பார்க்காமல், சில்லறையும் தாளுமா அள்ளி அம்மம்மாவின்ர கையில குடுப்பா. அம்மம்மாவும் மனம்நிறைஞ்சு ஒரு புளுகத்தோடை நடையைக் கட்டுவா. அப்பேக்க இப்ப நான் இருக்குற தல்லையப்புல வீட்டில வயது போன ஆக்கள் ரண்டுபேர் இருந்தவை. ஒரு ஆள் அம்மான்ரை தேப்பன்ரை தாய். இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னா, அம்மான்ரை பேத்தியார். அவவை அம்மா 'அப்புவாத்தை' எண்டு சொல்லுவா. மற்ற ஆள் ,அம்மான்ரை தேப்பன்ரை தம்பிக்காரன். அவரை அம்மா 'பெத்தப்பா' எண்டு சொல்லுவா. அவர் நிறைய மாடுகள் வைச்சிருந்தவராம். காலமை அந்த மாடுகளையெல்லாம் அவிழ்த்துத் தரவைக்கு மேய்ச்சலுக்குக் கொண்டுபோய்ப் பொழுதுபடக்குள்ள சாய்ச்சுக்கொண்டு வருவாராம்.

04

அம்மான்ரை தேப்பன் ஒரு பள்ளிக்கூட வாத்தியார் எண்டு ஏற்கனவே ஊர்ப்புதினத்தில சொல்லியிருக்கிறன். அதாலை நெருங்கின சொந்தக்காரர் சிலர் அவரைப் 'பள்ளியம்மான்' எண்டும், அவரின்ர தம்பிக்காரன் மாடு மேய்க்கிறதால அவரை 'உம்பாயம்மான்' எண்டும் சொல்லுறவையெண்டு அம்மா எனக்குச் சொல்லியிருக்கிறா.

அந்த ரண்டு வயது போன ஆக்களையும் பார்த்து எடுத்து, இறுதி காரியமெல்லாஞ் செய்து வழியனுப்பி வைச்சதெல்லாம் அம்மாதான். இப்பவும் ஊரிலுள்ள சில வயதுபோனாக்கள் அந்த உம்பாயம்மான் என்கிற பெத்தப்பா வேலுப்பிள்ளையரைப் பற்றிக் கதைகதையாச் சொல்லுவினம். எங்கட அண்ணாக்கள் இரண்டு பேருக்கும் அவரை வடிவாகத் தெரியும். நான் பிறக்கிறத்துக்கு இரண்டு வரியம் முந்தி அவர் போய்ச் சேர்ந்துட்டார்.

அம்மா இரவிரவாச் சட்டை தைக்கிற நேரத்தில அவரும் துணைக்கு முழிச்சிருப்பாராம். இரவில 'நத்து'( சின்ன ஆந்தை) அழுதால் அண்ணாக்கள் பயத்தில முழிச்சுக்கொண்டிருக்க, பெத்தப்பா ஒரு வேலை செய்யுறவராம். அதுக்குக் கட்டுப்பட்டு நத்து பறந்து போகிடுமெண்டு அம்மா சொல்லுவா.

எனக்கும் முந்திச் சின்னனில இராவில நத்து அழுதால் அஞ்சுங் கெட்டு அறிவுங்கெட்டிடும். அப்ப அம்மாவும் பெத்தப்பா செய்யுற அந்த வேலையைத் தான் செய்யுறவா. அது என்னவெண்டு அடுத்த கிழமை சொல்லுறன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்






வெ.விரித்திகன்,
தரம் 7
யா/புனித பத்திரிசியார் கல்லூரி




ப.பவனுசன்,
தரம் -6A
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

த.அக்ஷயன்,
தரம் 2
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை





உ.யோபிஹா,
தரம் -7D
வவு/ நெளுக்குளம் கலைமகள் மகா வித்தி.



சொ.மித்ரேஷ்
தரம் -10F
யாழ்.இந்துக் கல்லூரி.



அ.நிதுஷனா
தரம் 9 F
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை





யூ.ர.திபோநாத்.
தரம்9
யா/இந்துக்கல்லூரி

## அறிந்துகொள்வோம்



- மனித உடலில் உள்ள மிகப்பெரிய உறுப்பு தோல் ஆகும்.
- உடலில் உள்ள இரத்தம் சிவப்பு நிறமாக இருப்பதற்குக் காரணம் அதில் உள்ள 'ஹீமோகுளோபின்' என்ற புரதம்.
- தாவரங்கள் தங்களுக்குத் தேவையான உணவைத் தாங்களே தயாரித்துக்கொள்கின்றன. இந்த நிகழ்விற்கு 'ஒளித்தொகுப்பு' என்று பெயர்.
- குதிக்க முடியாத ஒரே விலங்கு யானை
- உலகிலேயே மிகப்பெரிய பெருங்கடல் பசிபிக் பெருங்கடல்.
- தமிழ்நாட்டில் 'கோவில்களின் நகரம்' என்று காஞ்சிபுரம் அழைக்கப்படுகிறது.



- சூரிய குடும்பத்தில் மொத்தம் எட்டு கோள்கள் உள்ளன. இதில் புதன் சூரியனுக்கு மிக அருகில் உள்ள கோள் ஆகும்.
- இமயமலையில் உள்ள எவரெஸ்ட் சிகரம் உலகின் மிக உயர்ந்த சிகரமாகும்.
- மின்னல் வெட்டிய பிறகே இடிச்சத்தம் கேட்கும். ஏனெனில் ஒலியைவிட ஒளி மிக வேகமாகப் பயணம் செய்யும்.
- பென்குயின்கள் பறவைகளாக இருந்தாலும் அவற்றால் பறக்க முடியாது, ஆனால் மிக நன்றாக நீந்தும்.
- வெளவால்கள் மட்டுமே பறக்கக்கூடிய பாலூட்டி இனம் ஆகும்.



## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org